Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரீகம்! நாளைய நாகரீகம்!
மகாராசி சில்க்ஸ்
மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P.No : 0777286247.
(சி/2203)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 றஜப் 08 (25.08.2004) புதன்கிழமை இதழ்:327

## கருணா குழுவை சேர்ந்தவர் நீதிமன்றில் சுட்டுக்கொலை!

### அக்கரைப்பற்றில் பரபரப்புச் சம்பவம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது - கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

வெடிகுண்டுகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கருணா குழுவைச் சேர்ந்த பெரியப்பன் ஜெயக்குமார் என்ற மேற்படி நபர் கடந்த மே மாதம் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் அண்மையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா - சிதம்பரபுரம் பகுதியில்

## காணாமற்போன இளம் பெண்ணின் எலும்புக்கூடு மலக்குழியிலிருந்து மீட்பு!

(வவுனியா)

வவுனியா - சிதம்பரபுரத்தில் மேலும் ஒரு எலும்புக்கூடு நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.

சிதம்பரபுரத்தில் உள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கான நலன்புரி நிலையத்தில் இருந்து எட்டு மாதங்களுக்கு முன்னர் காணாமற்போனதாகக் கூறப்படும் 22 வயதுடைய வானதி செல்வம் என்ற இளம் பெண்ணின் எலும்புக்கூடே கழிவறைக் குழி ஒன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

பாவனைகள் இல்லாத பற்றைகள் அடர்ந்த கழிவறைக் குழியில் இருந்து ஆடைகளுடன் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் மீட்கப்பட்ட இந்த எலும்புக்கூடு குறிப்பிட்ட பெண்ணின் தாயாராலும், சகோதரியாலும் அடையாளம் காட்டப்பட்டது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் காட்டுப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மண்டையோடுகள் தொடர்பாக வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் (12 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில்

# தமிழ் ஆயுதக் குழுக்களை ஈடுபடுத்துவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்தவேண்டும்!

## நோர்வே தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்



(ஒஸ்லோ)

**விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தமிழ் ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்துவதை இலங்கை அரசாங்கம் நிறுத்தவேண்டும். இதன்மூலமே போர்நிறுத்த உடன்பாட்டுக்கு தற்போது ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்று நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.**

உலக சமாதானத்துக்கான ஏற்பாட்டுக் குழுவினருக்கு இலங்கை சமாதான முயற்சிகள் குறித்து விளக்கமளிக்கும் வகையிலான கலந்துரையாடலிலேயே எரிக் சொல்ஹெய்ம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

இலங்கைக்கான சமாதான முயற்சிகளில் நோர்வே அரசாங்கம் ஏற்பாட்டாளர் நிலையிலேயே தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. எவருக்கும் தீமை தராத தீர்வை ஏற்படுத்துவதே நோர்வேயின் விருப்பம்.

முரண்பட்டுள்ள இரு தரப்பினரையும் சமாதானத்தீர்வு ஒன்றை நோக்கி அழைத்துச் செல்வதே நோர்வேயின் பங்கு. இந்த நடவடிக்கைக்கு அழுத்தங்களை பிரயோகிக்க நோர்வே விரும்பவில்லை. அவ்வாறு அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டுமானால், இந்தியாவிடம் அல்லது அமெரிக்காவிடமே இவர் (12 ஆம் பக்கம் பார்க்க)



நல்லைக் கந்தனின் நான்காம் நாள் உற்சவ திருவீதியுலாக் காட்சி.

## மல்வத்தை பீட மகாநாயக்கர் புலிகளைச் சந்திக்க விருப்பம்!

### — சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

மல்வத்த பீடத்தின் மகாநாயக்க தேரர் சிறிசுமங்கள தேரர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு விரும்புவதாகவும், வெளிநாட்டவர்கள் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நிலையில் தம்மால் வெறும் பார்வையாளராக இருக்க முடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

நேற்று மல்வத்த மகாநாயக்கர் மலையக (12 ஆம் பக்கம் பார்க்க)

### விடுதலைப் புலிகளுக்கு எதிரான

# சர்வதேச நிலைப்பாட்டை உருவாக்க கண்காணிப்புக்குழு உதவவேண்டும்!

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோரிக்கை

விடுதலைப்புலிகள் மேற்கொண்டுவரும் படுகொலைகளுக்கு எதிராக சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு- பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் நேற்றுக் காலை இடம்பெற்ற கூட்டமொன்றில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட்புறூவ் ஹொவ்டேயிடம் கேட்டுக்கொண்டார்.

வடக்கு- கிழக்கு நிலைமை குறித்து ஆராய நடைபெற்ற சந்திப்பிலேயே சிறில் ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்துடன். முப்படைத் தளபதிகளும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் கருத்து வெளியிடுகையில்-

இத்தகைய கொலைகள் பற்றிய அறிக்கைகளை விடுதலைப் புலிகள் மீது அழுத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் விசேட பாதுகாப்புத் திட்டம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களை அடுத்து மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் விசேட பாதுகாப்புத் திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவிருப்பதாக விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி தெரிவித்தார்.

அதிகரிக்கும் வன்முறைகள் குறித்து ஆராய அம்பாறை மாவட்ட பாதுகாப்புப் (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# 25 தொழில்நுட்ப மாணவர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு!

## வேலைவாய்ப்பு பணியகப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலிருந்து முதற் கட்டமாக 25 தொழில்நுட்பவியலாளர்கள் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

இந்த அறிவித்தலை இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தின் பணிப்பாளர் அபயகுணவர்த்தன தெரிவித்தார்.

இதுகுறித்துத் தெரியவருவதாவது -

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக கடந்த 20 ஆம் திகதி யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நேர்முகத்தேர்வொன்று இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தால் நடத்தப்பட்டது.

இதில், தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்சிபெற்று வெளியேறியோர், தொழில்நுட்பவியலாளர்கள் உட்பட சுமார் 375 பேர் கலந்துகொண்டனர்.

இவர்களில், தெரிவு செய்யப்பட்ட 175 பேர் நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள றொக்கி முகாமைத்துவ நிறுவனத்தினால் கொழும்புக்கு அழைக்கப்பட்டு செய்முறைத் தேர்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களில் - முதற்கட்டமாக 25 பேர் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

இவர்களிடமிருந்து பயணச் செலவு எதுவும் அறவிடப்படமாட்டாது. அதேவேளை - அடுத்த தொகுதியினரை மலேசியா, இத்தாலி, கொரியா போன்ற நாடுகளுக்கு அனுப்புவதற்கு அமைச்சர் பியசேன கமகேயும், இலங்கை வேலைவாய்ப்புப் பணியகமும் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

### நெடுந்தீவு அபிவிருத்தி குறித்து நாளை மறுதினம் கலந்துரையாடல்

நெடுந்தீவு மக்களின் அபிவிருத்தி தொடர்பாக யுஎன்.எச்.சி.ஆர் நிறுவனத்தினரின் கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நெடுந்தீவு பிரதேசசபை பொது நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமிய புனர்வாழ்வு புனரமைப்புகுழு உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (113)

### மிதிவெடி வெடித்து குடும்பஸ்தர் காயம்

இளவாலைப் பகுதியில் காணியொன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடி வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இளவாலையைச் சேர்ந்த பாலன் மனோகரன் (வயது 43) என்பவரே காலில் பலத்த காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுக்காலை இந்தப் பகுதியிலுள்ள தோட்டக் காணியொன்றில் பற்றைகளை வெட்டிக்கொண்டிருந்தபோதே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### விளையாட்டுப் போட்டி

திருநெல்வேலி கம்பன் சனசமூக நிலையத்தினர் நடாத்தும் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நேற்று முன்தினம் பி.ப 3 மணிக்கு கம்பன் சனசமூக நிலைய முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது

திருநெல்வேலி கம்பன் சன சமூக நிலையத் தலைவர் க.ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராக நலலூர் பிரதேச செயலாளர் பொ.வைரமுத்து, மற்றும் சிறப்பு விருந்தினர் ஆகியோருடன் பலரும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டோருக்கு விரைவில் நிவாரணம் வழங்க நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்படும்போது - ஐ.ஒ.எம் நிறுவனத்துடன் தொடர்புகொண்டு, இங்கு வந்தவர்களுக்கே உதவிகள் வழங்கப்படும் என யாழ்.மாவட்ட ஐ.ஒ.எம் நிறுவனத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்துத் தெரிவித்திருப்பதாவது -

வெளிநாடுகளிலிருந்து எமது மக்கள் திருப்பி அனுப்பப்பட்டபோது, அந்த நாடுகளிலுள்ள ஐ.ஒ.எம் நிறுவனத்துடன் தொடர்புகொண்டு அங்கிருந்து வந்தவர்களுக்கே ஐ. ஒ.எம் நிறுவனம் உதவிகளை வழங்கும்.

யாழ்.மாவட்டத்திலிருந்து வெளிநாடுகளில் தங்கியிருந்து, திருப்பி அனுப்பப்பட்டோர் தொடர்பாக ஐ.ஒ.எம் ஆராய்ந்து வருகிறது. விரைவில் அவர்களுக்கான நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# நெடுந்தீவு பிரதேச செயலக அபிவிருத்திக்குழுக் கூட்டம்!

நெடுந்தீவு பிரதேச செயலக மாதாந்த அபிவிருத்திக் குழுக்கூட்டம் நாளை காலை 11.00 மணிக்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில் - நெடுந்தீவுப் பிரதேசத்தின் கல்வி, சுகாதாரம் போக்குவரத்து, மின்சாரம், குடிநீர் விநியோகம் மற்றும் துரித அபிவிருத்தி திட்ட வேலைகள் உலர் உணவு விநியோகம் மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, கமநல சேவைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (113)

## நமது ஈழநாடு

### இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிக்கான விதிகள்

#### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

#### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 CM X 4 CM ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரவாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

#### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

மத்திய பிரிவு- க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

மேற்பிரிவு - அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**குறிப்பு:-** இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:- நமது ஈழநாடு - 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

TVS மோட்டார் சைக்கிள் வாழிக்கையாளர்களுக்கு



யசோ மோட்டார்
மற்றும்
TVS கம்பனி
இணைந்து நடத்தும் இலவச சேவிஸ் (Free Service) இன்று யாழ்ப்பாண சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற இருப்பதால் அனைத்து TVS மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் - மோட்டார் சைக்கிளுடன் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

TVS Lanka PVT (Ltd) அங்கீகாரம் பெற்ற விற்பனை முகவர்
YASO MOTORS No. 163, STANLY ROAD, JAFFNA T.P. 222 2544

M.G.M உற்பத்திப் பொருட்களின் ஏக விநியோகஸ்தர்களான
முகமது கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ்
இல.777, கே.கே.எஸ். வீதியில் மீண்டும் தங்களுடைய வியாபாரத்தை ஆரம்பித்து விட்டார்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்

ஆட்டா மா, வறுத்த சிவப்பு அரிசி மா, வறுத்த வெள்ளை அரிசி மா, வெள்ளை அரிசி மா, கடலை மா, குரக்கன் மா, உழுந்து மா, கோதுமை குறுணல்

ரோஸ் ரசம், நண்னாரி ரசம், நெல்லி ரசம், கிறேப் சர்பத், பஷன் ரசம், மிக்ஸ் புரூட் ரசம், அன்னாசி ரசம், தேசிக்காய் ரசம்

நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், ஒலிவ்வெண்ணெய்

வினாகிரி, அயடீன் உப்பு, ஐசிங் சீனி, பேக்கிங் பவுடர், அப்பச்சோடா, கொக்கோ பவுடர், சிற்றிக் அசிட்.

தேசிக்காய் ஊறுகாய், வெள்ளைப் படு ஊறுகாய், மோர் மிளகாய்

வெள்ளைப் பிட்டுக் கலவை, சிவப்புப் பிட்டுக் கலவை, திடீர் தோசைக் கலவை, திடீர் அப்பக் கலவை

சீயாக்காய் பவுடர்

பிளீச்சிங் பவுடர்

ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
M.G.M. T.P :- 0777 741195 0777 741295
(C/2961)

நாகம்ஸ்
இன்று முதல் பிரசாந், மீனா, சுஹாசினி நடித்த



தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

நிரஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, சௌந்தர்யா, சிவாஜி, நடித்த
படையப்பா
காட்சிநேரம்:11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
Strike Force
(சி-2723)

ராஜா யாழ்ப்பாணம்.



கமல், சினேகா, பிரபு நடித்த
வசூல்ராஜா MBBS
விரைவில் விஜய் நடித்த மதுர
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2725)

# சமாதான பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிக்குமாறு வற்புறுத்தவேண்டும்!

## யுத்த விரோத தேசிய முன்னணியின் அமைப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்படாதுவிட்டால், நாடு யுத்தத்துக்குச் செல்லும் தன்மை உருவாகும் என நாம் அரசுக்குக் கூறுகிறோம் என, யுத்தவிரோத தேசிய முன்னணியின் அமைப்பாளர் குமார் ரூபசிங்க தெரிவித்தார்.

கேகாலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற சமாதானச் செயற்பாட்டை மீண்டும் ஏற்படுத்தவேண்டும் என்ற தலைப்பில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

யுத்தம் மீண்டும் ஆரம்பித்துவிடுமோ என்ற அச்சம் அனைவரின் உள்ளத்திலும் இருக்கிறது. இனங்களுக்கிடையேயான சமாதானப் பேச்சுவார்த்தை உடைந்து வீழ்கின்றது. இந்த நாட்டில் அது நிகழவேண்டுமா? தற்போது நாங்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை 6 தடவைகள் நிகழ்த்தியுள்ளோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் பயனற்றுப்போனதுடன், வன்செயல்கள் அதிகரிக்கின்றன. 1958 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கை செயற்படுத்தப்பட்டிருந்தால் இன்று எமதுநாடு பல முன்னேற்றங்களை அடைந்திருக்கும்.

இன்றைய இடைக்கால நிர்வாக சபையைவிட சிறந்த நீதியான வேண்டுகோள்கள் அதில் இருந்தமையை எதிர்த்து இந்த நாட்டின் இரண்டு அரசியல் கட்சிகளும் ஒன்றாகவே நடவடிக்கை எடுத்தன.

சிங்கள ஆட்சியாளர்களது அசமந்தப் போக்கினாலேயே சமாதான வேலைத்திட்டங்கள் உடைந்து வீழ்ந்தன. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இன்னும் பிரதான கட்சிகள் விரும்பவில்லை.

மொழிப்பிரச்சினையைக் கொண்டுவந்தபோது தமிழ்மக்களுக்கு தமிழீழத்தை வழங்கி இருக்கவேண்டும் என ஜே.ஆர்.ஜெயவர்த்தன கூறினார். ஒரு மொழியாக்கினால் நாட்டில் யுத்தம் மூளும் என்று தமிழ் மொழிக்கு இடம்வழங்கவில்லை என்றால், அது மனித உரிமை மீறும் செயல் என்று கூறினார்.

சிங்கள மொழியை அரச மொழியாக்கியதால், வடக்கிற்கு எந்தவிதமான பயன்களும் கிடைக்கவில்லை. தமிழ்மக்கள் - பொலிஸ் நிலையத்துக்கு, அரச அலுவலகங்களுக்குச் சென்று தமது துயரங்களைச் சொல்ல முடியாமற்போனது.

இளைஞர்களின் செயற்பாடுகள் இடையில் நின்றுபோனது. தமிழ்மக்கள் சிங்கள இனத்தவர்களிடம் இருந்து விலகும் நிலை உருவாகியது. ஆட்சியாளர்கள் சிறுபான்மையினரை ஒதுக்கிவைத்துவிட்டுச் செயற்பட்டார்கள். நீதியான வேண்டுகோள்களை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள்.

வடக்கு - கிழக்குக்கான உரிமைகள் இல்லாமற்போனது. ஆகையால் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இதன்போது பெருமளவான மக்கள் கொல்லப்பட்டார்கள்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை ரணில் விக்கிரமசிங்க உண்டாக்கினார். ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளன. இந்தப் பேச்சுவார்த்தையினால் யுத்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. தற்காலிக சமாதானம் உண்டானது. ஆனாலும் தீர்வுக்கு வரமுடியாமற்போனது.

பிரதான கட்சிகள் இரண்டும் அதிகாரத்தை வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்தன. இதனைச் செயற்படுத்துவதற்கு கட்சிகள் இரண்டும் விரும்பினாலும், அவர்கள் ஒன்றிணையப்போவதில்லை. இரண்டு கட்சித் தலைவர்களிடமும் அதிகார ஆசை இருக்கிறது. அதனை நான்தான் செய்யவேண்டும் என்று கட்சித் தலைவர்கள் நினைக்கிறார்கள்.

இந்த அரசு சமாதானத்தை உண்டுபண்ணப்போவதாகச் சொல்லி, 4 மாதங்கள் சென்றுவிட்டன. எங்கே சமாதானம்? இப்பொழுது நாடு ஆபத்தான கட்டத்திற்கு முகங்கொடுத்துள்ளது. இவர்கள் சமாதானத்தோடு விளையாடுகிறார்கள்.

இன்று சுதந்திரக்கட்சியின் பலத்தை அதிகளவு ஜே.வி.பியினர் எடுத்துக்கொண்டுள்ளனர். சமாதான வேலைத்திட்டம் பற்றி கூட்டணியின் கட்சிகள் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கின்றன. சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு நாங்கள் அரசுக்குக் கூறுகிறோம்.

காலங்கடத்தி வந்தால் நாடு யுத்தத்துக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படும். இந்தத்தடவை யுத்தம் ஒன்று ஏற்படுமானால், நாங்கள் நினைத்துப்பார்க்கமுடியாத அளவுக்கு அழிவுகள் ஏற்படும். நாடு இருந்தாலும் அதல பாதாளத்துக்கு நாங்கள் இழுத்துச்செல்லப்படுவோம்.

இடைக்கால நிர்வாகசபை ஆலோசனைகள் மற்றும் அரசின் ஆலோசனைகளோடு சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு நாங்கள் அரசுக்குக் கூறுகிறோம் என்று அவர் மேலும் கூறினார்.

## தனியார் பஸ் உரிமையாளர்கள் நாளைமுதல் வேலைநிறுத்தம்!

(கொழும்பு)

தனியார் பஸ் உரிமையாளர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்போவதாக தீர்மானித்திருந்த நாடளாவிய ரீதியிலான பஸ் சேவை நிறுத்ததை நாளை முதல் ஆரம்பிக்கப்போவதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஜெமுனு விஜயரட்ண, போக்குவரத்துப் பிரதி அமைச்சர் லசந்தவுக்கு நேற்று முன்தினம் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

ஆகக்குறைந்த கட்டணமான ரூபா 3 ஐ 4 ஆக உயர்த்துவதற்கு அரசு அனுமதி வழங்குவதாக பிரதி அமைச்சர் வாக்குறுதி அளித்திருந்தும் நம்பிக்கையான தகவல்களின் அடிப்படையில் அமைச்சர்கள் பலர் கட்டண உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தே)

## சீமெந்தின் விலை 15 ரூபாவால் அதிகரிப்பு

மிற்சுயி, சமுத்ர மற்றும் செவன இன சீமெந்துகளின் விலை 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது இதன்படி 420 ரூபாவாவுக்கு விற்கப்பட்ட பைக்கற் ஒன்று 435 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

உலக வர்த்தக சந்தையில் சீமெந்தின் விலை அதிகரிப்பு, போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிப்பு மற்றும் டொலரின் பெறுமதி உயர்ந்துசெல்லல் ஆகியவற்றின் காரணமாகவே சீமெந்தின் விலையும் 15 ரூபாவால் அதிகரிக்க நேர்ந்துள்ளதாக சீமெந்துக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (தே)

# இராணுவத்தினர் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் உள்வீட்டு வேலையா?

## பெரும்பான்மை இன ஆய்வாளர் கேள்வி

அண்மையில் காயங்கேணியில் இடம்பெற்ற இரு சம்பவங்கள் அரச புலனாய்வுத்துறை சார்ந்த குழுக்களின் உள்வீட்டு வேலையாக இருக்கலாம் என்ற ஹேஸ்யம் கொழும்பின் பிரபல ஆங்கில ஊடகமொன்றின் பெரும்பான்மை இன ஆய்வாளர் ஒருவரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

காயங்கேணியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் இரு புலிகள் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு அடுத்தநாள், அந்தப் பகுதியில் இராணுவத்தினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதும், அதன்போது ஒரு இராணுவ வீரர் காயமடைந்ததும் தெரிந்ததே.

அதேபோன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடொன்றில் வேறொரு இராணுவ வீரர் காலில் காயமடைந்தார். இந்த இரண்டு சம்பவங்களும் காயங்கேணி இராணுவ முகாமுக்கு அணமித்த பிரதேசத்திலேயே இடம்பெறறுள்ளன.

மட்டக்களப்பு எல்லைப்புறமாக இரண்டு இராணுவக் காவலரண்களுக்கிடையே வைத்து விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில், இராணுவத்தினரின் பங்கு இந்த விவகாரத்தில் இருப்பது ஏறக்குறைய உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், தங்களுக்கு அதனால் ஏற்பட்ட அபகீர்த்தியைத் துடைக்குமுகமாகவே இந்த இரு தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ற சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது.

அதன் காரணமாகவே இந்தப் பகுதி பாதுகாப்பற்ற ஒரு பகுதியென்றும், யாரும் இலகுவில் அணுகக்கூடிய பகுதியென்றும் காட்டுமுகமாகவே, இரு கண்துடைப்புத் தாக்குதல்களும் இடம்பெற்றிருக்கலாம் என்றும், இரண்டு தாக்குதல்களின் போதும் தலா ஒவ்வொரு இராணுவ வீரருக்கும் சிறிய காயங்களே ஏற்பட்டன என்பனவும் தனது கருத்தை அவர் உறுதிப்படுத்தினார்.

புலிகள் மீதான தாக்குதலில் தமது பங்கு உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அதனை இல்லாது செய்யுமுகமாக இவ்வாறு நடத்தப்படும் தாக்குதல்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவும், முதற்கட்ட அதிகாரிகளும் இணைந்தே செயற்படும் வாய்ப்புள்ளதாகவும், இது பற்றிய விபரங்கள் கீழ்நிலை அதிகாரிகளுக்கோ, சிப்பாய்களுக்கோ தெரியவரும் சாத்தியமில்லை என்றும் தெரிவித்த இந்தஆய்வாளர்-

இவ்வாறான நடவடிக்கை மூலம் அந்தப்பகுதி தமிழ் ஆயுதக்குழுக்கள் மற்றும் புலிகளின் நடமாட்டம் உள்ள பகுதிபோலக் காட்டுவதோடு, படையினர் மீதான இந்த மிரட்டல் தாக்குதலின் மூலம் கீழ்நிலை அதிகாரிகளையும், சாதாரண சிப்பாய்களையும் புலிகளுக்கு எதிரான போக்கிற்கு நிரந்தரமாக மாற்றும் போக்கும் காணப்படுவதாகவும் அந்த ஆய்வாளர் தெரிவித்தார்.

# வாக்களிப்பதற்கு அடையாள அட்டை; கட்சித் தலைவர்களுக்கு பிரதமர் அழைப்பு



(கொழும்பு)

வாக்களிப்பதற்கு அடையாள அட்டையைக் கட்டாயமாக்குவது சம்பந்தமான சட்டமூலம் தொடர்பாகக் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதன்படி செப்ரெம்பர் 2 ஆம் திகதி இந்தக் கலந்துரையாடல் நடைபெறுமென நாடாளுமன்ற குழுக்களின் தலைவரது செயலாளர் டபிள்யூ.சமரசிங்க தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் அபயக்கோன் ஆகியோரும் கலந்துகொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலைக்கு புத்துயிர் அளிக்க அரசாங்கம் தீர்மானம்!

வாழைச்சேனையில் அமைந்துள்ள கிழக்கிலங்கைக் காகித உற்பத்தித் தொழிற்சாலை மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சூழலில், அதனை மீள இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

அண்மையில் இந்தத் தொழிற்சாலைக்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்த கிழக்கு உட்கட்டுமான அபிவிருத்தி அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் நடவடிக்கையை அடுத்து, இந்தத் தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கு 5 மில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த நிதியைப் பயன்படுத்தித் தொழிற்சாலை இயந்திரங்கள் யாவும திருத்தம் செய்யப்பட்டு, இயங்கவைக்கப்படும் என இந்தத் தொழிற்சாலையின் முகாமையாளர் ஆர். கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

# மின், பஸ், ரயில் கட்டணங்கள் அடுத்த சில நாட்களில் உயரும்

## நிதி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த சில வாரங்களில் மின்சாரம, பஸ், ரயில் கட்டணங்கள் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக நிதியமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரி.பி.ஜயசுந்தர தெரிவித்தார்.

நிதியமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே செயலாளர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

மின்சாரக் கட்டணம் 5 வீதத்தால அதிகரிக்கப்படுமென்றும், இந்த அதிகரிப்பு வீட்டுப் பாவனையாளருக்கு மாத்திரம் இருக்கும். ரயில் கட்டணம் 7 தொடக்கம் 8 வீதத்தால் அதிகரிக்கப்படும். இதேவேளை எதிர்வரும் நவமபர் மாதம் 10 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இணையக் கேபிளை சேதமாக்கிய கப்பலை தடுத்துவைக்க உத்தரவு!

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள ஸ்ரேற்றற் நாகலன்ட் என்ற இந்தியக் கப்பலைத் தடுத்துவைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது கொழும்பு மேல் நீதிமன்றம், துறைமுகப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இந்த ஆணையைப் பிறப்பித்துள்ளது.

இலங்கைக் கடற்பகுதியில் ரெலிக்கொம் நிறுவனத்துக்குச் சொந்தமான சர்வதேச இணையக் கேபிள் ஒன்றினை அறுத்த குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்திருக்கிறது.

ரெலிக்கொம் நிறுவனம் தாக்கல் செயதிருந்த மனு ஒன்றை, மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் பரிசீலித்த பின்னர் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. இலங்கைக் கடற்பரப்பில்-கல்கிசையிலிருந்து 9 கடல்மைலுக்கு உட்பட்ட பிரதேசத்தில் இருக்கும் ரெலிக்கொம் நிறுவனத்தின் இணையத்தளக் கேபிள் சேதமாக்கப்பட்டது.

இதனால் நாட்டிலிருக்கின்ற 8 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டதாகவும், இதனால் ஏற்பட்ட நஷ்டத்துக்கு 5 மில்லியன் அமெரிக்க டொலரை நஷ்ட ஈடாகப் பெற்றுத்தருமாறு மனுவில் கோரப்பட்டுள்ளது. கப்பல் நிறுவனத்தின் உரிமையாளரை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுககப்பட்டுள்ளது. (01)

## உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை விடமறுக்கும்

# முன்னாள் எம்.பிக்களுக்கு எதிராக சட்ட நடவழக்கை!

உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களிலிருந்து இன்னமும் வெளியேறாதிருக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பது பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவர்களை வெளியேறச் செல்லும் நீதிமன்ற உத்தரவைப் பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சு எதிர்பார்த்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த பொதுத்தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத இந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பு, கெப்பிட்டிபொல மாவத்தையிலுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை விட்டு வெளியேறாது அங்கேயே வசித்து வருவதால், புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வதிவிடங்களை ஒதுக்குவதில் கடும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஒலிம்பிக் பதிவுகள்....



ஜிம்னாஸ்ரிக் போட்டியில் தங்கம் வென்ற ருமேனிய வீராங்கனை



பதக்கம் பெற்ற வெற்றிக் களிப்பில் தொட்டுத் தழுவும் வீராங்கனைகள்







# அமெரிக்க வீராங்கனைக்கு 12 ஒலிம்பிக் பதக்கங்கள்!

ஒலிம்பிக் போட்டிகளில் மொத்தம் 12 பதக்கங்களை வென்று அமெரிக்காவின் நீச்சல் வீராங்கனை ஜென்னி தொம்சன் புதிய சாதனை படைத்தார்.

எனினும், தனிநபர் பிரிவில் பதக்கம் வெல்லும் தனது ஆசை நிறைவேறாதது குறித்து தாம் வருத்தம் அடைவதாக அவர் தெரிவித்தார்.

4 ஆவது ஒலிம்பிக்கில் பங்கேற்கும் 31 வயதுடைய தொம்சன் - 8 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம் என, மொத்தமாக 12 பதக்கங்களை அவர் பெற்றுள்ளார். ஆனால் இவை அனைத்தும் குழுப் பிரிவில் பங்கேற்றுப் பெற்றவையே.

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் 100 மீற்றர் தொடர் மெட்லி பிரிவில், அவர் வெள்ளிப் பதக்கம் பெற்றார். முன்னதாக 100 மீற்றர் ஃபிரீஸ்டைல் தொடர் நீச்சல் பிரிவில் வெண்கலம் வென்றார்.

இதன்மூலம் அமெரிக்காவின் மார்க் ஸ்பிட்ஸ், மாட் பியாண்டி ஆகியோரின் சாதனையை முறியடித்து நீச்சல் பிரிவில் அதிக பதக்கங்களை வென்றவராகத் திகழ்கின்றார் தொம்சன்.

ஏதென்ஸ் ஒலிம்பிக்குடன் ஓய்வு பெறப்போவதாக அவர் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் நீச்சல் போட்டிகளில் அமெரிக்காவுக்கு 28 பதக்கங்கள்

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் நடைபெற்றுவந்த நீச்சல் போட்டிகள் முடிவுக்கு வந்தன. இந்த நீச்சல் போட்டிகளில்,

அமெரிக்கா - 12 தங்கம், 9 வெள்ளி, 7 வெண்கலம் என மொத்தமாக 28 பதக்கங்களையும்,

அவுஸ்ரேலியா - 7 தங்கம், 6 வெள்ளி, 2 வெண்கலம் என மொத்தமாக 15 பதக்கங்களையும்,

ஜப்பான் - 3 தங்கம், 1 வெள்ளி, 4 வெண்கலம் என மொத்தமாக 8 பதக்கங்களையும் வென்றன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் - ஆண்களுக்கான 100 மீற்றர் தொடர் மெட்லி நீச்சல் பிரிவில் அமெரிக்கா உலக சாதனை படைத்தது. இந்தத் தூரத்தை அமெரிக்க அணி 3 நிமிடம் 30.68 விநாடிகளில் கடந்தது. இதில் ஜேர்மனி வெள்ளியும், ஜப்பான் வெண்கலமும் பெற்றன.

கடந்த ஆண்டு பார்சிலோனியாவில் நடைபெற்ற உலகச் சம்பியன்ஷிப் போட்டியில்- 3 நிமிடம் 31.54 விநாடிகளில் குறித்த தூரத்தைக் கடந்து அமெரிக்க அணி உலக சாதனையைப் படைத்திருந்தது.

பெண்களுக்கான 100 மீற்றர் தொடர் மெட்லி நீச்சல் பிரிவில் அவுஸ்ரேலியா புதிய உலக சாதனையுடன் தங்கம் வென்றது. இந்தத் தூரத்தினை 3 நிமிடம் 57.32 விநாடிகளில் அவுஸ்ரேலியப் பெண்கள் கடந்தனர்.

அமெரிக்கா இதில் தங்கம் வென்றதால் தகுதிச் சுற்றில் பங்கேற்றதன் அடிப்படையில் ஹெல்ப்ஸ்"க்கும் தங்கம் கிடைத்தது. இதன்படி ஆறு தங்கம், 2 வெண்கலம் உட்பட 8 பதக்கங்களைப் பெற்றார். ஹெல்ப்ஸ் இதன்மூலம் ஒரு ஒலிம்பிக்கில் அதிக பதக்கம் வென்ற சாதனையை சமன்செய்தார்.

1980 இல் ரஷ்யாவின் ஜிம்னாஸ்டிக் வீரர் அலெக்ஸாண்டர் திதியாதின் அதிக பதக்கங்களை வென்ற சாதனையைப் படைத்திருந்தார்.

ஒரு ஒலிம்பிக்கில் நீச்சல் பிரிவில் அதிக பதக்கங்களை வென்ற வீரராக ஹெல்ப்ஸ் திகழ்கிறார்.



பெண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் தங்கம் வென்ற ரஷ்யாவின் இறினா கோர்ஷனென்கோ.



உலகின் அதிவேக ஓட்ட வீரராக தெரிவான ஜஸ்ரின் கெட்லின்.




400 மீற்றர் ஓட்டத்தில் - தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை சுவீகரித்த அமெரிக்க வீரர்கள்




800 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்ற பிரிட்டிஷ் வீராங்கனை.

# ஹொலண்ட் முத்தரப்பு போட்டி; இந்திய அணி வெளியேற்றம்!



(ஆம்ஸர்டார்)

ஹொலண்டில் நடைபெற்றுவரும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நேற்றுமுன்தினம் இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஆட்டம் மழை காரணமாக இடையில் நிறுத்தப்பட்டு இரு அணிகளுக்கும் தலா மூன்று புள்ளிகள் வழங்கப்பட்டன.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்கத்திலும் மழை பெய்த காரணத்தால் 50 ஓவர்கள் 33 ஓவர்களாகக் குறைக்கப்பட்டன.

இதன்படி துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணிக்கு, ஆரம்பம் முதலே இந்திய பந்துவீச்சாளர்கள் மிகவும் அச்சுறுத்தலாக அமைந்தனர்.

அவுஸ்ரேலிய அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கையில் 31.4 ஆவது ஓவரில் மழை குறுக்கிட்டதனால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

இதில் அவுஸ்ரேலிய அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. இந்த அணி சார்பாக - ஹைடன் 29, ஹடின் 5, றிக்கிபொண்டிங் 26, மார்ட்டின் 12, அன்ரு சைமன்ஸ் 12, லீமன் 19, கிளார்க் 42, பிரட்ஹொக் மற்றும் பிரட்லீ இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 19, 01 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 12 ஓட்டங்கள் இந்திய அணியால் விட்டுக் கொடுக்கப்பட்டது.

பந்துவீச்சில் பாலாஜி 3, கும்ளே 2, ஷேவாக் மற்றும் நெஹ்ரா இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதேவேளை, தொடர்ந்து பெய்த மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டு இரு அணிகளுக்கும் சம புள்ளிகள் வழங்கப்பட்டதனால் இந்திய அணி இறுதிப் போட்டிக்கு செல்லும் வாய்ப்பை இழந்தது. (01)

# நூற்றாண்டின் சிறந்த அணியில் சச்சின் டெண்டுல்கர், கில்கிறிஸ்ட்!

(லண்டன்)

ஐ.சி.சியால் முதல் தடவையாக கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கப்படவுள்ள ஒஸ்கார் விருது வழங்கும் குழுவின் தலைவர்களில் ஒருவரும், தற்போதைய கிரிக்கெட்டின் நேர்முக வர்ணனையாளருமான அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரர் றிச்சி பெனோ இந்த நூற்றாண்டின் சிறந்த கிரிக்கெட் அணியொன்றை தெரிவுசெய்துள்ளார்.

இவரது இந்த கிரிக்கெட் அணியின் வீரர்களாக ஜக்ஹொப்ஸ் (இங்கிலாந்து), சுனில் கவாஸ்கர் (இந்தியா), டொன்பிரட்மன் (அவுஸ்ரேலியா), சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), விவியன்றிச்சட்ஸ் (மேற்கிந்தியத் தீவுகள்), இம்ரான்கான் (பாகிஸ்தான்), ஹாபில் சோபர்ஸ் (மேற்கிந்தியத்தீவுகள்), அடம்கில்கிறிஸ்ட் (அவுஸ்ரேலியா), ஷேன் வோன் (அவுஸ்ரேலியா), சிட்னிபான்ஸ் (இங்கிலாந்து), டெனிஸ்லில்லி (அவுஸ்ரேலியா) ஆகியோர்களாவர்.

இவரது இந்தப் 11 பேரடங்கிய அணியில் மிகச்சிறந்த வீரர்களான முரளி, வசீம் அக்ரம், ஷோன்பொலக், கொட்னிவோல்ஷ், பிரைன் லாரா போன்ற வீரர்கள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (01)

### மினி உலகக் கிண்ணப் போட்டியில்

# ஊக்கமருந்து பாவித்தால் வீரர்களுக்கு கடும் தண்டனை

## ஐ.சி.சி. அறிவிப்பு

(லண்டன்)

இங்கிலாந்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள மினி உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் கிரிக்கெட் வீரர்கள் யாராவது ஊக்கமருந்து உட்கொண்டமை கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுக்கு சர்வதேச போட்டிகளில் விளையாட இரண்டு ஆண்டு காலத் தடை விதிக்கப்படும்.

இவ்வாறு சர்வதேச கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஊக்க மருந்துப்பொருள் உட்கொண்டமை கண்டுபிடிக்கப்படும் வீரருக்கு, இரண்டு வருடத் தண்டனை வழங்கப்படுவதுடன் பெருமளவு தொகைப் பணமும் தண்டமாக விதிக்கப்படும்.

ஊக்கமருந்துப் பரிசோதனை - வீரர்கள் மீது திடீரெனவே நடத்தப்படும். 15 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் ஒவ்வொரு போட்டிகளிலும் பங்குபற்றும் வீரர்கள் திடீரென பரிசோதனை செய்யப்படுவர்.

கடந்த உலகக் கிண்ணப் போட்டியில் அவுஸ்ரேலிய வீரர் ஷேன்வோன் ஊக்க மருந்து பாவித்தமை கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே, ஐ.சி.சி இந்தக் கடுமையான நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

இந்த ஊக்கமருந்து பரிசோதனைக்கு ஐ.சி.சியால் குழு ஒன்று அமைக்கப்படும். அவர்களே வீரர்களைப் பரிசோதனை செய்வர்.

ஊக்க மருந்து பாவித்தமை கண்டுபிடிக்கப்படும் வீரர்கள் எதிர்காலத்தில் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதும் கேள்விக்குறியாக அமையும் எனவும் தெரிவித்தார். (01)

# ஒரு நாள் தரவரிசை இலங்கை இரண்டாமிடம்!

(லண்டன்)

சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தால் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான அணிகளின் தர வரிசை வெளியிடப்பட்டிருக்கிறது.

இதன்படி, அவுஸ்ரேலியா முதலாம் இடத்திலும், இரண்டாம் இடத்தில் இலங்கை அணியும் மூன்றாம் இடத்தில் நியூஸிலாந்து அணியும்,

நான்காம் இடத்தில் தென்னாபிரிக்க அணியும், ஐந்தாம் இடத்தை பாகிஸ்தான் அணியும் ஆறாவது இடத்தை இந்தியாவும் பெற்றுக்கொண்டன.

தரவரிசைப் பட்டியலில் மூன்றாம் இடத்திலிருந்த இலங்கை அணி தென்னாபிரிக்காவுடனான இரண்டு போட்டிகளிலும் வென்ற பின்னர், இரண்டாமிடத்திற்கு முன்னேறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

### இங்கிலாந்தில் நடைபெறவுள்ள

# ஐ.சி.சி.கிண்ணத்திற்கு அமெரிக்காவும் போட்டி

(வொஷிங்டன்)

அடுத்தமாதம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ஐ.சி.சி.கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்கேற்பதற்காக 14 பேர் கொண்ட அமெரிக்க அணி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

றிச்சட் ஸ்ரப்பிள் தலைமையிலான இந்த அணியில் - மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிறேற்றன் லம்பேட்டும் இடம்பெற்றுள்ளார்.

இந்த அணியில் இடம்பெற்ற வீரர்களில் நால்வர் நியூயோர்க்கையும் நால்வர் புளோரிடாவையும் சேர்ந்தவர்கள்.

அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் பின்வருமாறு -

றிச்சட் ஸ்ரப்பிள், நஸீர் ஜாவிட், சார்லஸ் றெய்ட், சமீன்கமின், ஹோவட் ஜோன்சன், அய்ஜஸ்அலி, மார்க் ஜோன்சன், லியன் றொமேரியோ, நஸீர்இஸ்லாம், றொகான் அலெக்சான்டர், ரஷீட் ஷியா, ஸ்ரீவ் மசியா, கினேற்றன் லம்பேட், இம்ரன் அவான்.

(1) நான்கு (2) ஐந்து (3) ஆறு (4) ஏழு

23. பின்வருவனவற்றுள் நெடுங்கணக்கு ஒழுங்கு முறையில் அமைந்துள்ளது எது?
(1) அ ஆ இ உ ஈ (2) ஆ ஏ ஓ ஐ
(3) ஊ ஏ ஔ ஓ (4) ஆ ஈ ஐ ஔ

24. உச்சரிக்கும் பொழுது நுனி நாவின் உதவியை வேண்டி நிற்கும் ஒரு சொல்.
(1) அப்பா (2) அன்னை (3) மாமா (4) மாமி

25. பெயர்ச் சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் வரும் ஒரு சொல்.
(1) கல் (2) நில் (3) வெல் (4) மெல்

26. இலக்கண நூல்கள் பன்மையெனக் கூறும் ஒன்று தற்கால வழக்கில் பொதுவாக ஒருமையில் வழங்குகின்றது.
(1) நீவிர் (2) நாம் (3) நீர் (4) எல்லீர்

27. மகரவீற்றுப் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபு ஏற்குமிடத்துப் பெறுவது.
(1) அற்றுச்சாரியை
(2) அத்துச்சாரியை
(3) அத்தும், அற்றும்
(4) இன்சாரியை

28. பின்வருவனவற்றின் இரு வேறு எழுவாய்கள் தொக்க வாக்கியங்கள் அமைவது.
(1) இங்கே வா! இதை உண்
(2) தட்டுங்கள்: திறக்கப்படும்
(3) இன்று போகின்றேன்: நாளை வருவேன்
(4) வந்தார்! மக்களைக் கண்டார்! வென்றார்.

29. சொற்கள் புணரும்போது திரிதல் விகாரம் தோன்றுவதற்கு ஓர் உதாரணம்.
(1) பொன்வண்ணம் (2) வாழைப்பழம்
(3) மரவடி (4) பொற்குடம்

30. மாட்டினையா ஓட்டினான் என்னும் வாக்கியத்தில் பொருளுணர்ச்சிக்கு அவசியமற்ற ஓர் உறுப்பு.
(1) மாடு (2) ஐ (3) இன் (4) ஆ

31. வாழ் என்ற ஏவல் வினையின் வியங்கோள் வடிவம்.
(1) வாழ்தல் (2) வாழ்ந்தான்
(3) வாழ்த்துக (4) வாழ்க

6. பின்வரும் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்க.

32. உங்களுள் ஒருவன் இதனை
(1) எழுதக் கடவன் (2) எழுதக் கடவர்
(3) எழுதக் கடவது (4) எழுதக் கடவீர்

33. வசந்தன் பரீட்சையில் தவறியதற்குக் காரணம்
(1) அவன் நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டிருந்தான்.
(2) அவன் நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டிருந்தமையினாலாகும்.
(3) அவன் நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டிருந்தபடியால்.
(4) அவன் நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டிருந்தமையாகும்.

34. ஆணோ பெண்ணோ அங்கே நிற்பவர் என்ற வினாவிற்கு விடை.
(1) அது பெண்ணல்ல ஆண்
(2) அங்கே நிற்பவன் பெண்ணல்ல ஆண்
(3) அற்கே நிற்பவர் பெண்ணல்லள் ஆண்
(4) அங்கே நிற்பது பெண்ணன்று ஆண் ஆவான்

5. நீங்களா அவரா இங்கே குப்பை
(1) போட்டீர்கள் (2) போட்டார்
(3) போட்டார்கள் (4) போட்டது.

36. நான் சிறுவனாக இருக்கும்போது இந்தக் கோயிலுக்கு
(1) வந்தது வழக்கம் (2) வந்தமை வழக்கம்
(3) வருகின்றது வழக்கம். (4) வருவது வழக்கம்

7. பின்வரும் பந்தியை வாசித்த பின் அதன்கீழுள்ள ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தருக.

மக்கள் உயிர் வாழ்க்கைக்கு மட்டுமன்றி இந்த நிலவுலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்குமே நீரானது மிகவும் தேவையுள்ளதாய் இருக்கிறது. உயிர்த் தொகுதிகளுள் மிகவும் கீழ்ப்படியான நிலையில் இருக்கும் மரம், செடி, கொடிகளும், புல்பூண்டுகளும்கூடத் தண்ணீரையே பெரும் உதவியாகக் கொண்டு உயிர் பிழைத்து வருகின்றன. பார்வைக்கு வெறுமையாய்த் தோன்றும் தண்ணீரைப் பருகி அவையெல்லாம் செழித்து வளர்ந்து எவ்வளவு பொலிவாய்த் தோன்றுகின்றன. நாலைந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக மழை பெய்யாதுவிட நிலம் வறண்டுபோகுமாயின் அவையெல்லாம் கருகி பட்டுப்போம் என்பது எவர்க்குந்தான் தெரியாது. இன்னும் அந்த மரங்களில் உறையும் பறவைகளும், அவற்றின் நிழலில் உறையும் விலங்குகளும் கான்யாறுகளிலும் சுனைகளிலும் இருக்கும் தெளிநீரைப் பருகி எவ்வளவு களிப்பாய் உயிர் வாழ்கின்றன். மழைக்காலத்தில் நம்முன்னோர் தண்ணீரின் அருமையை உணராது விட்டாலும் வேனிற் காலத்து வெப்பம் தாங்காமல் துடிக்குங்கால் அவர்கள் தண்ணீரே உயிரெனக் கூறுதலைக் காண்கிறோம் அன்றோ? ஆதலால் நீரின் சிறப்பையும் இன்றியமையாமையையும் தெரியாத உயிர் இந்த நிலவுலகத்தில் எதுவுமே இல்லையென்று திண்ணமாய்ச் சொல்லலாம்.

37. இந்தப் பந்தியில் கூறப்படும் பிரதான கருத்து.
(1) தாவரங்கள் வளரத் தண்ணீர் இன்றியமையாதது.
(2) விலங்குகளும், பறவைகளும் தாவரங்களில் தங்கியுள்ளன.
(3) மழைக்காலத்தில் மக்களுக்குத் தண்ணீர் அருமை தெரிவதில்லை.
(4) எல்லா உயிர்களுக்கும் தண்ணீர் இன்றியமையாதது.

38. இந்தப் பந்தியின் தொடக்க வாக்கியம்.
(1) பிரதான கருத்தை எடுத்துக் காட்டுகிறது.
(2) பிரதான கருத்துக்கு ஆதாரமான ஒரு துணைக்கருத்தைக் கூறுகிறது.
(3) பிரதான கருத்தைவிட்டு மற்றொன்று விரித்தலாக அமைகிறது.
(4) மற்றொருவர் கருத்தை வழிமொழிந்து நிற்கிறது.

39. இந்தப் பந்தியின் முடிவு வாக்கியம்.
(1) தொடக்கத்தில் கூறிய கருத்தை மீண்டும் கூறுகிறது.
(2) பந்தியில் வளர்ந்த கருத்தை வாசகர் மனதில் பதியுமாறு வலியுறுத்துகிறது.
(3) அடுத்து வரப்போகும் பந்தியின் கருத்தை ஆரம்பித்து வைக்கிறது.
(4) பிரதான கருத்தை எதிர்மறை வாய்ப்பாட்டால் வலியுறுத்துகிறது.

8. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் கிடக்கின்றன. இவற்றை ஒழுங்குற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

(அ) எனினும் சிறிய நாடான ஜப்பான் வான்வெளி ஆராய்ச்சியில் மிகவும் முன்னேறியுள்ளது.
(ஆ) பிறநாடுகள் பொருட்செலவு, தொழில், நுணுக்கச் சொற்கள் என்பன காரணமாக அதில் ஈடுபடவில்லை.
(இ) இதனை யப்பான் பத்தாண்டுகளாக அமைதியாகச் செய்து வந்துள்ளது.
(ஈ) எனவே இந்தக் காலத்தை வான்வெளியுகம் எனலாம்.
(உ) வான்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்காவும் ரஷ்யாவும் பெரும் சாதனைகளை நிலைநாட்டியுள்ளன.

40. பந்தியின் சரியான வைப்பு முறை.
1) அ, ஆ, இ, உ, ஈ
2) ஆ, ஈ, இ, அ, உ
3) இ, ஆ, ஈ, உ, அ
4) உ, ஈ, ஆ, அ, இ

தொகுப்பு - N.பாலா
மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

— இங்கே மடிக்கவும் —





# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

◆ 1ம், 2ம் வினாக்களில் உள்ள மூன்று உருக்களிடையே ஏதோ ஒரு தொடர்பு உண்டு. பொருத்தமற்ற தொடர்பினைக் காட்டும் உருவின் கீழ் கீறிடுக.

1.

A B C D
(1) A (2) C (3) D

2.

A B C D
(1) A (2) D (3) B

◆ 3ம், 4ம் வினாக்களில் ஐந்து நிகழ்வுகள் தரப்பட்டுள்ளன. இந்நிகழ்வுத் தொடர்கள் குறிப்பிட்ட சந்தர்ப்பம் ஒன்றை காட்டுகின்றன. இவை சரியான ஒழுங்கு வரிசையில் காணப்படவில்லை. இந்த நிகழ்வு ஒழுங்கைக் காட்டும் சரியான விடையின் கீழ் கீறிடுக.

1 2 3 4 5

(1) 4,3,1,2,5 (2) 1,2,3,4,5 (3) 2,5,4,3,1

1 2 3 4 5

(1) 3,4,2,1,5 (2) 5,3,1,4,2 (3) 1,4,3,2,5

◆ 5ம், 6ம் வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.

| |
|---|
| அ + ஆ = 6 |
| அ + அ = 8 |
| ஆ + இ = 7 |
| இ + ஈ = 6 |

5. இதன் படி அ இ ஈ என்பதால் காட்டப்படும் எண்ணைத் தெரிவு செய்து கீறிடுக.
(1) 342 (2) 676 (3) 451

6. அ-ஆ+இXஈ என்பதன் பெறுமானம் யாது?
(1) 8 (2) 9 (3) 7

◆ 7,8 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதை குறிக்கும் விடையின் கீழ் கோடிடுக.

7. காலையிலும் மாலையிலும் பல்துலக்குதல் வேண்டும்.
(1) அறிவித்தலாக (2) செய்தியாக (3) அறிவுறுத்தலாக

8. சிறுவர் உரிமையைப் பாதுகாப்போம்,
(1) அறிவித்தலாக (2) செய்தியாக (3) அறிவுறுத்தலாக

◆ 9, 10 ஆம் வினாக்களிலுள்ள நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியை தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

எனது நண்பனுக்கோ ஒரு சிறு குடிசைதானுமே இல்லை. ஆனால் அவன் ஆசையெல்லாம் ஒரு மாளிகை வாங்க வேண்டும் என்பது தான்.
(1) அறையில் ஆடியல்லோ அம்பலத்தில் ஆடவேண்டும்.
(2) தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்.
(3) ஆசை இருக்கிறது அரசனாய் அதிஸ்ரம் இருக்கிறது கழுதை மேய்க்க.

10. விமல் ஏழையாக இருந்தாலும் பிறரிடம் ஏதொன்றும் கேட்காமல் உள்ளதைக் கொண்டு காலம் கழித்தார்.
(1) ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
(2) சுடலில்லா கஞ்சி கால்வயிறு போதும்
(3) எறும்பூர கல்லும் தேயும்.

◆ 11, 12 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கீறிடுக.

11. மார்கழி மாதம் பலத்த காற்றுடன் மழையும் பொழிந்து கொண்டிருந்தது. மழையும் பொழிந்து கொண்டிருந்த அதிகாலை வேளையில் குயில் கூவிய சத்தம் கேட்டு நல்லதம்பி நித்திரை விட்டு எழுந்தான். மேலுள்ள வாக்கியத் தொடரில் கருத்துப் பிழையாவதற்கு காரணமான விடை எது?
(1) மார்கழி மாதத்தில் மழை பெய்வதில்லை
(2) குளிர் காலத்தில் குயில் கூவுவதில்லை.
(3) நல்லதம்பி நித்திரை செய்வதில்லை.

12. வேந்தன் இரவில் நிலவில் விளையாடிக் கொண்டிருக்கும் போது, வானவில்லின் அழகைக் கண்டு, மிகவும் வியப்படைந்தான். மேலுள்ள வாக்கியம் கருத்துப் பிழையாவதற்கு காரணமாக அமைவது?
(1) இரவில் வானவில்லைக் காணமுடியாது
(2) இரவில் வானவில் அழகாக இருக்காது
(3) வேந்தன் இரவில் விளையாடவில்லை.

◆ 13, 14 ஆம் வினாக்களின் சரியான விடையின் கீழ் கீறிடுக.

13 உடையொன்றினைக் கழுவும் போது சரியான முறையினைக் காட்டும் விடையின் கீழ் கீறிடுக.
(1) சவர்க்காரமிடல் - ஊறவிடல் - கசக்குதல் - கழுவுதல் - பிழிதல்
(2) பிழிதல் - ஊறவிடுதல் - சவர்க்காரமிடல் - கசக்குதல் - பிழிதல்
(3) ஊறவிடுதல் - பிழிதல் -சவர்க்காரமிடல் - கசக்குதல் -கழுவுதல்

14. கூடிய வேகத்தில் எரியக்கூடிய பொருட்களில் இருந்து குறைந்த வேகத்தில் எரியக் கூடிய பொருட்கள் வரை வகைப்படுத்துக.
(1) பஞ்சு, தென்னோலை, தடி, விறகுக்கட்டை
(2) தென்னோலை, பஞ்சு, தடி, விறகுக்கட்டை
(3) தென்னோலை, பஞ்சு, விறகுக்கட்டை, தடி

◆ 15, 16 ஆம் வினாக்களின் தரவினை அடிப்படையாகக் கொண்டு சரியான விடையின் கீழ் கீறிடுக.
P= பெண்பிள்ளைகள், Q= ஆண்பிள்ளைகள் R= பிள்ளைகள் எனின்

15. கீழே காணப்படும் உருவப் படங்களில் மிகவும் சரியான உருவினைத் தெரிவு செய்து விடையின் இலக்கத்தை வட்டமிடுக.



16. இவ் உருவப் படத்தின் படி A,B எனப்படுவது


(1) A ஆண்பிள்ளைகள், B பெண்பிள்ளைகள்
(2) B பிள்ளைகள், A பெண்பிள்ளைகள்
(3) A பிள்ளைகள், B ஆண்பிள்ளைகள்

◆ 17, 18 ஆம் வினாக்களில் உள்ள சொல் வரிசையில் பொருத்தமான சொற்களுடன் பொருந்தாத சொல், இடம்பெறும் சொல் வரிசையின் கீழ் கோடிடுக

17. (1) மாதா, பிதா, குரு, தெய்வம்
(2) மெய், வாய், கண், மூக்கு, செவி
(3) மா, வாழை, அப்பிள், பலா

18. (1) தபேலா, உடுக்கு, தவில்
(2) வயலின், கிற்றார், வீணை
(3) கிரிக்கெட், காற்பந்து, மேசைப்பந்து

19 தொடக்கம் 32 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையின் கீழ் கோடிடுக.

19. மாறனுக்கு இப்போது வயது 9 ஆண்டுகளாக இருக்கும் போது, ராஜனுக்கு 13 ஆண்டுகளாகும். ராஜனின் வயது மாறனின் வயதின் இரு மடங்காக இருந்தபோது ராஜனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்.
(1) 3 ஆண்டுகள் (2) 8 ஆண்டுகள் (3) 4 ஆண்டுகள்

20. மாறனின் வயதைவிட ராஜனின் வயது மூன்று மடங்காக இருந்த போது மாறனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்.
(1) 4 ஆண்டுகள் (2) 6 ஆண்டுகள் (3) 2 ஆண்டுகள்

21. ஒரு பெட்டியில் மூன்று வகையான நிறைகளில் 9 பொதிகள் இருக்கின்றன. அவற்றின் மொத்த நிறை 24 kg ஆகும்
பெட்டியில் உள்ள வெவ்வேறு வகை நிறைகளும் எவை?
(1) 5 kg பொதி 2, 2 kg பொதி 4, 1 kg பொதி 3,
(2) 5 kg பொதி 3, 2 kg பொதி 2, 1 kg பொதி 4,
(3) 5 kg பொதி 3, 2 kg பொதி 3, 1 kg பொதி 3,

22. சுகந்தியிடமும், சந்திராவிடமும் 60 பென்சில்கள் இருந்தன. சந்திராவிடம் இருக்கும் பென்சில்கள் 15 ஐ சுகந்திக்குக் கொடுத்தபோது, இருவரிடமும் சம எண்ணிக்கையான பென்சில்கள் இருந்தனவெனின், சுகந்தியிடம் ஆரம்பத்தில் இருந்த பென்சில்கள் எத்தனை?
(1) 15 (2) 10 (3) 25

23. என்னிடமிருந்த குறிப்பிட்ட ஒரு தொகைப்பணத்துடன் எனது தங்கையிடமிருந்தும் பெற்றுக்கொண்ட ரூபா 15 ஐயும் வாங்கி ஒரு பூச்சாடி ரூபா 12.50 ஆக 6 பூச்சாடிகள் வாங்கியபோது, நான் கடைக்காரனுக்கு ரூபா 25 ஐக் கடனாகக் கொடுக்கவேண்டியிருப்பின், என்னிடம் ஆரம்பத்தில் இருந்த பணம் எவ்வளவு?
(1) 35 ரூபா (2) 50 ரூபா (3) 75 ரூபா

24. சிறுமி ஒருத்தி மைதானமொன்றில் நடந்துசென்ற பாதையை அருகே உள்ள படம் காட்டுகிறது. சிறுமி நடக்க ஆரம்பித்த இடம் A எழுத்தாலும், நடந்து முடிந்த இடம் B எழுத்தாலும் காட்டப்பட்டுள்ளன.




சிறுமி எத்தனை முறை இடது பக்கமாகத் திரும்பினாள்.
(1) 5 (2) 6 (3) 7

25. 
இவ்வுருவில் ▲என நிறந்தீட்டப்பட்ட பகுதிகளை நீக்கினால் எஞ்சியிருக்கும் உரு எது?




26. 
இவ்வெட்டுருவை மடிப்பதன் மூலம் பெறப்படும் சதுரமுகி எது?

சரியான விடையின்கீழ் கீறிடுக.




27. தவமணி, தவமணியின் சகோதரன் வடிவேல், வடிவேல் துரைராசாவுக்கு என்ன? உறவு முறை சரியாயின் விடையினைத் தெரிவு செய்க?
(1) சகோதரன் (2) மருமகன் (3) மைத்துனர்

28. பின்வரும் உருவை கத்தரிக்கோலினால் ஒரு தடவை வெட்டுவதற்கு சதுரவடிவமான ஒரு கடதாசியை மடிக்கவேண்டிய தடவைகளின் எண்ணிக்கை யாது?



(1) 1 ஆகும் (2) 2 ஆகும் (3) 3 ஆகும்

29. கீழே உள்ள தராசில் இருபக்கங்களிலும் வைக்கப்பட்டுள்ள நிறைகள் சமமாவதற்கு, பூசணிக்காயின் நிறை யாது எனத் தெரிவுசெய்து சரியான விடையின் கீழ் கீறிடுக.




(1) 2Kg (2) 2 Kg 100g (3) 1 Kg 900g

30. வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருவினைத் தெரிவுசெய்து கீறிடுக.




31. 2541+3222 = △ ⊙ □ ✻ எனின்
⊙✻□+ △✻⊙=............. ஆகும். வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க?
(1)1237 (2)1723 (3)1273

32. 5763 - 2187 + ✻△⊙□ எனின், கீழே உள்ள உருக்களை அவற்றின் பெறுமானத்துக்கேற்ப ஏறுவரிசைப்படுத்தினால் சரியான விடையின் கீழ் கீறிடுக.
(1) ⊙□△✻ (2) ✻△⊙□ (3) ✻△□⊙

33, 34 ஆம் வினாக்கள் பின்வரும் இலக்கங்களையும் எழுத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டவை

33.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A | I | K | C | A | T |
| C | A | 2 | A | 9 | K |
| K | C | 8 | 3 | C | K |
| A | 7 | A | A | 4 | P |
| 6 | P | P | P | A | 5 |

இந்தக் கூடுகளில் உள்ள இலக்கங்களின் எண்ணிக்கை ஆங்கில எழுத்துக்களின் எண்ணிக்கையை விட கூடியதெனின் இலக்கம் 9 உள்ள கூட்டில் X ஐ வரைக. அவ்வாறு இல்லை எனின் இலக்கம் 2 உள்ள கூட்டில் X வரைக.

34. எழுத்து A இன் எண்ணிக்கை எழுத்து C இன் எண்ணிக்கையின் இருமடங்கு எனின், T உள்ள கூட்டில் X வரைக. அவ்வாறு இல்லையெனின் இலக்கம் 6 உள்ள கூட்டில் X வரைக.

• பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து அதனைப் புள்ளிக்கோட்டில் எழுதுக?

35. சிலப்பதிகாரம் என்னும் சொல்லில் மறைந்துள்ள 5 எழுத்துச் சொல்லின் முதல் எழுத்து பணத்தில் உண்டு குணத்தில் இல்லை. 3 ஆம் எழுத்து காதில் உண்டு மாதில் இல்லை. 5 ஆம் எழுத்து அம்பில் உண்டு அன்பில் இல்லை.

.............................................................

36. இது 6,5,4,8 என்னும் நான்கு இலக்கங்களில் ஏதாவது 3 இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய ஓர் மூவிலக்க எண்ணாகும். இதன் முதல் இலக்கம் ஓர் சதுர எண்ணாகும். இரண்டாவது எண் ஓர் முக்கோண எண்ணாகும். மூன்றாவது எண் ஓர் செவ்வக எண்ணாகும். அந்த எண் யாது?

.............................................................

• 37, 38 ஆம் வினாக்களின் ஒவ்வொரு கூட்டிலும் இலக்கங்களும், எழுத்துக்களும் இடப்பட்டுள்ள கோலத்தை விளங்கிக்கொண்டு வெற்றுக் கூட்டுக்குப் பொருத்தமான இலக்கத்தையும் ஆங்கில எழுத்தையும் புள்ளிக்கோட்டில் எழுதுக?

37. 


.............

38. 


.................

இங்கே மடிக்கவும்



# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை -2004
## தமிழ்மொழி

1. பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. மிடி வரினும் மேன்மக்கள் நிலை குலையார். மிடி என்பதற்கு ஒத்தகருத்துள்ள சொல்.
(1) செல்வம் (2) பெருமை (3) கர்வம் (4) வறுமை

02. 'நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது' என்ற தொடரில் வரும் நொதுமலாளர் என்பதன் கருத்து.
(1) நண்பர் (2) பகைவர் (3) நடுநிலையாளர் (4) வீரர்

03. கந்தன் புனையின் உதவியோடு ஆற்றைக் கடந்தான். புனை என்பதற்கு ஒத்தகருத்துள்ள சொல்.
(1) நண்பன் (2) தெப்பம் (3) நீரோட்டம் (4) பாலம்

04. காடழிப்புக்கு காரணமாக மரங்கள் உலர்வலயக் காடுகளில் ஐதாகக் காணப்படுகின்றன. ஐது என்பதற்கு எதிர்க்கருத்துள்ள சொல்.
(1) இடையிடை (2) செறிவு (3) சிறிது (4) பரந்து

05. கவிதையை நயத்தல் நல்லோர் அனுபவமே. நயத்தல் என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்.
(1) வியத்தல் (2) சுவைத்தல் (3) வெறுத்தல் (4) நச்சுதல்

2. பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

06. நாம் சுகமாக வாழ்வதற்கு நமது சூழலை மாசுபடுத்தும் ............................... எவையெனக் கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்.
(1) காரணிகள் (2) ஏதனங்கள் (3) சாதனங்கள் (4) கருவிகள்

07. மிகச் சிக்கலான கணிப்பு வேலைகளை மிகமிக குறுகிய காலத்தில் செய்து முடிக்கவல்ல கருவியான ............................... 20 ஆம் நூற்றாண்டின் விஞ்ஞான விந்தைகளுள் முதன்மையானது.
(1) எண்சட்டம் (2) எண்மானி (3) கணினி (4) கூட்டற்பொறி

08. வரவு செலவுத் திட்டத்தில் ............................... ஏற்படும்போது அரசாங்கம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கடன் பெற்று அதனை ஈடுசெய்கின்றது.
(1) பற்றாக்குறை (2) மிகை
(3) நட்டம் (4) நெருக்கடி

09. அரசியற் கட்சிகள் ............................... மக்களைக் கவர்கின்றது.
(1) பிரசன்னம் (2) பிரசாரம்
(3) பிரகாரம் (4) பரிதாபம்

10. நமது நாட்டிற் கற்றவர்களது ............................... விவசாய விருத்திக்குப் பிரதிகூலமாகவிருந்தது.
(1) பாராமுகம் (2) ஈடுபாடு
(3) ஒத்துழைப்பு (4) வேட்கை

3. பின்வரும் சொற்கூட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான தனிச்சொல்லைத் தெரிவுசெய்க.

11. வைத்தியரின் உதவியின்றித் தானே நோய்க்கு அனுபவத்தைக் கொண்டு செய்யும் மருந்து.
(1) ஆயுர்வேதம் (2) சித்தவைத்தியம்
(3) முதலுதவி (4) கைமருந்து

12. கல்வியிலே திறமை காட்டும் ஒருவருக்கு மேலும் தொடர்ந்து கற்பதற்காகக் கொடுக்கப்படும் உதவிப் பணம்.
(1) நன்கொடை (2) மானியம்
(3) புலமைப்பரிசில் (4) வசதிக்கட்டணம்

13. வாய்மொழியாகப் பரப்பப்படும் உறுதிப்படுத்தப்படாத செய்தி.
(1) வதந்தி (2) அவதூறு (3) சாட்சியம் (4) புனைசுருட்டு

14. பிறர் அறியாதபடி ஒரு கூட்டத்தாருள் வழங்கி வரும் குறிப்புச் சொல்.
(1) மழலை (2) குழூஉக்குறி (3) இடக்கரடக்கல் (4) ஒப்பாரி

15. ஊதியம் கருதாது உழைப்பினைத் தானம் செய்தல்.
(1) இரத்ததானம் (2) சிரமதானம்
(3) அன்னதானம் (4) கன்னிகாதானம்

4. பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

16. மதத் துறவியொருவர் உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கும் நிலையை விளக்குவதற்கான உவமைத் தொடர்.
(1) நீறுபூத்த நெருப்புபோல (2) பசுத்தோல் போர்த்திய புலிபோல
(3) மீகாமனில்லா மரக்கலம்போல (4) தாமரையிலைத் தண்ணீர்போல

17. காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும் என்பதன் கருத்து.
(1) பழையன கழியப் புதியன தோன்றும்.
(2) தீமையும் நன்மையும் மாறிமாறி வரும்.
(3) முதியோர் தளர்ச்சி கண்டு இளையோர் எள்ளி நகையாடுவர்.
(4) பிறந்தவை எல்லாம் பின்னர் இறக்கும்.

18. ஆதரவு இல்லாமல் இருத்தல் என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்.
(1) நடுத்தெருவில் நிற்றல்
(2) தோளோடு தோள் நிற்றல்
(3) தலைகீழாய் நடத்தல்
(4) கைவிரித்தல்

19. செயற்றிறமையுள்ளவர்கள் அற்பமான ஒரு கருவியைத்தானும் திறம்படக் கையாண்டு காரியத்தைச் சாதிப்பர் என்ற பொருள்படும் பழமொழி.
(1) சிறு துரும்பும் பல்குத்த உதவும்.
(2) வல்லவன் வகுத்ததே வாய்க்கால்.
(3) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
(4) வல்லவன் ஆட்டிய பம்பரம் மண்ணிலும் ஆடும்.

20. 'ஆடையில்லாதவன் அரைமனிதன்' என்ற பழமொழி உணர்த்தும் கருத்து.
(1) குழந்தைகள் பொதுவாக அழுவதில்லை.
(2) ஆடையில்லாமல் திரிபவரை முழுமனிதன் என்று சொல்ல முடியாது.
(3) ஆடையைக் கொண்டு ஒருவரை மதிப்பிடக் கூடாது.
(4) அவ்வச் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான உடை அணியாவிட்டால் ஒருவருடைய ஆளுமை முழுமை பெறாது.

5. சரியான விடையைத் தெரிவுசெய்க.

21. இக்காலப் பேச்சுவழக்கிலோ எழுத்து வழக்கிலோ மொழிக்கு முதலில் வாராத ஓர் எழுத்து.
(1) ர (2) ய (3) ல (4) ண

22. நடந்தனன் என்ற சொல்லிலே வந்துள்ள பகுபத உறுப்புக்களின் எண்ணிக்கை.

# கனடாவிலும் பொங்கு தமிழ் மாணவர் அமைப்புகள் ஏற்பாடு!

கனடாவில் பொங்கு தமிழ் நிகழ்வை எழுச்சியுடன் நடத்துவதற்கு மாணவர் அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கனடா தமிழ் மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

புலம்பெயர்ந்த நாடுகளில் இடம்பெற்றது போன்றே, கனேடியத் தமிழர்களின் இருப்பை அடையாளப்படுத்தவும், தாயகத் தமிழர்களுடனான தமது உறவுப் பேணலை வெளிப்படுத்தவும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விழா ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அதிகளவு தமிழர்கள் வாழும் நாடு கனடா என்பதும், கனேடியத் தமிழர்கள் தமது அடையாளத்தை நிருபிக்க வேண்டிய காலகட்டத்தில் தற்போது இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடா பல்வேறு நாடுகளில் இருந்தும் புலம்பெயர்ந்து, வந்த மக்களை அங்கமாகக்கொண்ட ஒரு நாடு என்பதும் இந்த இனங்கள் தமது தொப்புள்கொடி உறவைத் தொடர்ந்தும் பேணி, தமது இன அடையாளத்தை இழக்காமல் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த வகையில் கனேடியக் குடியுரிமைபெற்று தேசிய நீரோட்டத்தில் இணைந்துள்ள இதர இனங்களில் - ஸ்பானிய மொழி பேசுபவர்கள் தங்களை ஸ்பானிஸ் கனேடியர் என்றும், சீன மொழி பேசுபவர்கள் தங்களை சீனக்கனேடியர்கள் என்றும், கிரேக்க மொழி பேசுபவர்கள் கிரேக்க கனேடியர்கள் என்றும் ஒவ்வொரு இனங்களையும் தங்களது மொழி அடையாளங்களை வைத்தே அடையாளப்படுத்தி அழைப்பார்கள்.

இவ்வாறு தம்மை அடையாளப்படுத்தியுள்ள இந்த இனத்தவர்கள், தங்கள் கலை பண்பாடு விழுமியங்களைத் தொடர்ந்து பேணுவதுடன், பல பிரதேசங்களில் ஒரு குழுவாக வாழ்ந்துவருவது தங்களுக்கான அங்காடிகள் மற்றும் பண்பாட்டு நீரோட்டத்தில் பிரிக்கமுடியாத அங்மாக இருந்துவருவதே தமது தாயகத்துடனான தொடர்புகளை இறுக்கமாகப் பேணியும் வருகின்றனர். அந்த வகையில் கனேடிய நீரோட்டத்தில் இணைந்த தமிழர்கள் - தங்களை கனேடிய தமிழர்கள் என்ற அடைமொழியின் கீழே அடையாளப்படுத்தி வருகின்றனர். தற்போது சுமார் 3 லட்சம் பேரைக்கொண்ட கனேடியத் தமிழர்கள் தங்களின் இருப்பை அடையாளப்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றாகவே இந்தப் பொங்குதமிழ் நிகழ்வை சகல தமிழர் அமைப்புக்களும், தமிழ் ஊடகங்கள் ஆகியவற்றின் ஒருமித்த ஆதரவுடன் முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்வதன்மூலம், காத்திரமான ஒரு சமுதாயமாக ஒரே தலைமையின்கீழ் தம்மைப் பிரகடனப்படுத்துவதுடன், தமக்கும் தாயகத்துக்கும் இடையேயான தொடர்பைப் பேணி வலுப்படுத்தி, தற்போது சர்வதேச ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகளில் காத்திரமான பங்குவழங்கவேண்டிய கடப்பாடு கனடாவுக்கு உண்டு என்பதை தெளிவுபடுத்தும் இந்த நிகழ்வு, பெருமளவில் உதவும்.

தமிழ் தேசியம், தமிழர் தலைமை, தமிழர் தாயகம் சுயநிர்ணயம் போன்ற பொங்கு தமிழின் அடிப்படைகளை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தும் நிகழ்வாகவும் இது அமையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## முனைப்புடன் எழு கவிதை நூல் வெளியீடு

ஜேர்மனியில் வாழ்ந்து வரும் நகுலா சிவநாதன் எழுதிய முனைப்புடன் எழு கவிதை நூல் (புலம்பெயர் கவிதை) வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள வெளியீட்டு விழாவை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் நிகழ்த்துவார்.

பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ஈ.குமரன் தமிழ் சிறப்புக்கலை இறுதி மாணவன் இகான்டீபன் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவர்.

## உலக வங்கிக் குழு யாழ்ப்பாணம் விஜயம்

உலக வங்கிக் குழுவொன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து, நியாப் திட்டப் பணிகள் குறித்து ஆராய்ந்து சென்றது.

நியாப் திட்டத்தின் இலங்கைக்கான பொறுப்பதிகாரி நிகால் பெர்ணாண்டோ தலைமையிலான உலக வங்கிக் குழுவினரே நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

யாழ்.செயலகத்தில் இயங்கும் நியாப் திட்டஅலுவலக அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அவர்கள், யாழ்ப்பாணத்தில் எதிர்காலத்தில் மேற கொள்ளப்படவேண்டிய வேலைத் திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்து ஆராய்ந்து சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. (ப)

## இருபது வருடங்களாக திருத்தப்படாத வீதிகள்

கைதடி கிழககுப் பகுதியிலுள்ள ஊத்தல்மயான வீதி, கொத்தாக்கூடல் வீதி போன்றன கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக திருத்தப்படாதிருப்பதால், இந்தப் பகுதி மக்கள் பெரும் போக்குவரத்து கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக இந்தப் பகுதி மாணவர்களும், நோயாளர்களும் தினமும் இந்தப் பாதையை பயன்படுத்தி வருகின்றனர்.

கொத்தாக்கூடல் வீதியின் ஒரு பகுதி, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இந்த வருட ஆரம்பத்தில் திருத்தப்பட்டன.

சுமார் ஒரு கிலோமீற்றர் நீளமான வீதி, சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இருப்பதாகவும், பிரதேச சபையினரிடம் தாம் பல தடவைகள் வேண்டுகோள் விடுத் தும் இதுவரை எதுவிதமான நடவடிக்கைளும் எடுத்துதவவில்லை எனக் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதனைவிட சுமார் இரண்டு கிலோமீற்றர் வரை நீளமான ஊத்தல்மயான வீதியும் மிகமோசமாக சேதமடைந்துள்ளது.

இந்த இரு வீதிகளையும் திருத்தித் தருமாறு கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தினர் பல்வேறு நிறுவனங்களிடமும் வேண்டுகோள் விடுத்து வருவதுடன், தமது பிரதேசத்திலுள்ள சிறிய வீதிகளை கல், மண் என்பவற்றைப் போட்டு திருத்தி வருகின்றனர். (31)



அகில இலங்கை இளங்கோ கழகத்தின் மூத்த உறுப்பினர் பெரிய ஐங்கரனின் "எனக்கு மரணம் இல்லை" கவிதை நூல் வெளியீட்டு விழாவில் நூல் ஆய்வுரை செய்த கவிஞர் கல்வயல் வே.குமாரசுவாமிக்கு மாலை அணிவிக்கப்பட்ட போது, படம்: (14)

## - சின்னஞ்சிறு செய்திகள் -

### கடற்படை தளமாக மாறும் குறிகாட்டுவான் படகுத்துறை

நெடுந்தீவு, நயினாதீவு மக்கள் பயணம் செய்வதற்கு பயன்படுத்தும் குறிகாட்டுவான் இறங்குதுறை தற்பொழுது கடற்படையினரது தளம் போன்று மாறிவருவதாகவும், இதனால் எதிர்காலத்தில் இந்தத் துறையின் ஊடாக பயணம் செய்யும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டி ஏற்படும் என்று அஞ்சுகின்றனர். துறைக்குச் செல்லும் முற்பகுதியில் தடைத் துலாக்கள், காவலரண்கள் போட்டு கடற்படையினர் காவலில் ஈடுபடுகின்றனர். (61)

### வருடாந்த உற்சவம்

(சுதுமலை)

வண்.வடமேற்கு ஆறுகால் மடம் நாவலடி ஞானவைரவர் ஆலயத்தின் சாந்தீக மஹோற்வசம் நாளை ஆரம்பமாகவுள்ளது.

செப்ரெம்பர் 3 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த் தோற்சவமும் இடம்பெறவுள்ள தாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (91)

### வீதி விபத்தில் படுகாயம்

(அராலி)

அராலி வீதி, சங்கானையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லான்ட்மாஸ்ரர்-கார் விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பேரானந்தம் சுதர்சன் (21 வயது) என்பவர் இரு காலிலும் படுகாயமுற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சங்கானையில் இருந்து சங்கரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த காரும் எதிரே வந்த லான்ட்மாஸ்ரரும் பாதையின் வளைவொன்றில் எதிராக மோதியதில் லான்ட்மாஸ்ரரில் பயணஞ்செய்த இளைஞனே படுகாயமுற்றார். இந்தவிபத்துச் சம்பந்தமாக மானிப்பாய் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (48)

### நொராட் உதவியுடன் 14 குளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நொராட் அமைப்பின் நிதிஉதவியுடன் 14 குளங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. நொராட் அமைப்பினரது நீர் முகாமைத்துவம் மற்றும் சூழல், பாதுகாப்புச் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள இந்தப் புனரமைப்புத் திட்டத்திற்காக, முன்னுரிமை அடிப்படையில் குளங்கள். தெரிவு செய்யப்படவுள்ளது.

இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று கடந்த வாரம் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்றது. (14)

### அல்வாய் வடக்கில் வீரமுரசு நிகழ்வு

(அல்வாய்)

அல்வாய் வடக்கு மகாத்மா சனசமூக நிலைய முன்றலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு வீரமுரசு நிகழ்வு பருத்தித்துறைப் பிரதேச, தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் இ.அருமைத்துரை தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர் யாழ்மொழியின் தயார் வடமராட்சீ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பு, தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் கிருஷ்ணசிங்கம் ஆகியோர் ஏற்றினர்.

இதனைத் தொடர்ந்து அகவணக்கம் நடைபெற்றது. பின்னர் தலைமையுரையை அடுத்து சிறப்புரைகளை வடமராட்சி கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொருளாளர் அ.ம.செபஸ்தியான், தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் துரை சத்தியசீலன் ஆகியோர் உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து முன்பள்ளி சிறார்களின் நடனம், நாட்டியம் என்பன இடம்பெற்றன. இதன் பின்னர் வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து வருகை தந்த மகளிர் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் சங்கு நாதம் இசை நடனம் இடம்பெற்றது.

### மனோன்மணி அம்பாள் அலங்கார உற்சவம்

(கொக்குவில்)

நவாலடி பேச்சியம்பாள் மனோனமணி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதி புதன்கிழமை வரையான 12 நாட்கள் நடைபெற இருக்கும் அலங்கார உற்சவத்தில் தினமும் காலை 9.30 மணிக்கு அபிஷேகமும், மாலை 6.30 மணிக்கு மூலஸ்தான பூசையும், 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நிகழ்ந்து, அம்பாள் திருவீதி வலம்வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (206)

### குறிகாட்டுவான் முகமாலை பஸ்சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவானிலிருந்து 776 இலக்கமுடைய பஸ் தினமும் காலை 8.30 மணிக்கு முகமாலை நோக்கிப் புறப்படுகின்றது.

துறையில் இருந்து காலை 8.30 மணிக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு, யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து முகமாலைக்கு செல்கின்றது. இந்தப் புதிய பஸ்சேவையினால் நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு, வேலணைப் பிரதேச மக்கள் நன்மையடைந்துள்ளனர். (61)

### தீவுப் பகுதிகளில் புதிய காவலரண்கள்

(புங்குடுதீவு)

தீவுப் பகுதிகளில் கடற்படையினர் புதிய காவலரண்களை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

புதிதாக சில அரண்களை அமைப்பதோடு, பழைய காவலரண்களையும் புனரமைப்பு செய்கின்றனர். பண்ணை வீதி, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி பகுதிகளில் இதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த நடவடிக்கை யுத்தம் ஒன்றை தோற்றுவிக்குமோ! என்ற அச்ச உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது. (61)

## வானமே கூரையாக இயங்கிவரும் கட்டைக்காடு தமிழ் கலவன் பாடசாலை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அடிப்படை வசதிகளற்ற நிலையில், இரண்டு வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட ஓலைக் கொட்டகையிலேயே தொடர்ந்து இயங்கி வருகிறது.

கொட்டகையின் கூரை சேதமடைந்த நிலையில் காற்றுக்காரணமாக, கொட்டகைக் கப்புகளும் சரிந்த நிலையிலுள்ளன. இது மழை காலதுக்கு முன் திருத்தப்படாவிடின், மழை காலத்தில் பாடசாலை நடத்த முடியாத நிலை ஏற்படும்.

தரம் ஆறு வரையுமுள்ள சுமார் 140 பிள்ளைகள் கல்விபயிலும் இந்தப் பாடசாலைக்கு இரண்டு கட்டடங்கள் அமைத்துத் தரும்படி கடந்த வருடம் இந்தப் பிரதேசத்தில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற அரசாங்கத் திணைக்கள உயர் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள் இந்தப் பிரதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, விடுதலைப் புலிகளின் - கடற்புலிகளின் அரசியற்துறையின.

ஆகியோர் கலந்து கொண்ட மகாநாட்டில் கோரிக்கை ஏற்கப்பட்டும், பாடசாலைக் கட்டடங்கள் அமைப்பதற்குரிய எந்தவொரு நடவடிக்கையும் இன்றுவரை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

எனவே, பாடசாலைக் கட்டடங்கள் அமைப்பதற்குரிய வேலைகளை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென பாடசாலை நலன்விரும்பிகள் எதிர்பார்க்கின்றனர். (21)

# திருநெல்வேலி சந்தை வியாபாரிகள் குடிநீர் பெறுவதில் அசௌகரியம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலி சந்தையில் வியாபாரிகள், சந்தைப் பணியாளர்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட திருநெல்வேலி சந்தையில் இருநூறுக்கும் அதிகமான வியாபாரிகளும், தொழிலாளர்களும் வியாபாரம் மற்றும் ஏனைய பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது இங்கு சந்தை கட்டட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால், இட வசதியின்மை பிரச்சினையை அவர்கள் எதிர்கொள்வதோடு, அவர்களுக்கான குடிநீரைப் பெறுவதற்கு அருகிலுள்ள தேநீர்க் கடைகளையே நாடவேண்டியுள்ளதால் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்தச் சந்தைக்குள் இரண்டு கிணறுகள் இருந்தும் அவற்றைப் பாவிக்க முடியாத நிலையிலுள்ளதால், குடிநீர் பற்றாக்குறை நிலவுகின்றது.

இது தொடர்பாக நல்லூர் பிரதேச சபை செயலாளரிடம் கேட்டபோது - இதற்கான நீர்த்தாங்கி அமைக்கும் பணி துரிதமாக இடம்பெற்று வருதாகவும், இன்னும் 20 நாட்களுக்குள் திருநெல்வேலி சந்தைக்கான நீர்விநியோகம் கிடைக்க ஆவன செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

## படையதிகாரி வைத்தியசாலையில்

# ஆட்கொணர்வு மனு விசாரணை ஒக்ரோபருக்கு ஒத்திவைப்பு!

(கொடிகாமம்)

கொடிகாமம் எருவன் பகுதியில் கைதுசெய்யப்பட்டு, காணாமற்போன வேலுப்பிள்ளை உதயகுமாரின் ஆட்கொணர்வு மனு மீதானவிசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு அவர் கைதுசெய்யப்பட்டபோது, எருவன் பகுதி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியாக இருந்த லெப்டினன்ட் கேணல் ரஞ்சன் மகிந்தரட்ண சிறுநீரக சத்திரசிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அவர்சார்பில் யாழ்.மேல் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி கப்டன் குருப்பு தெரிவித்து, மருத்துவச்சான்றிதழ் சமர்ப்பித்தார்.

இதனையடுத்து யாழ்.மேல் நீதிமன்ற நீதிவான் கே.பி.எஸ்.வரதராஜா இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ப)

# கர்ப்பிணித் தாய்மாருக்கு சத்துணவு வழங்கப்படவுள்ளது

நல்லூர் பிரதேச சபையினரால் கர்ப்பிணித் தாய்மார், பிள்ளைகளுக்கான சத்துணவு விநியோகம் இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்குமான சத்துணவு விநியோகம் இடம்பெறவுள்ளது.

இந்தச் சத்துணவு விநியோகத்துக்காக நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் தாய் சேய் நலன்புரி நிலையங்களின் விபரங்களையும், அதில் சிகிச்சைபெறும் தாய்மார்களின் விபரங்களையும், ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் விபரங்களையும் அனுப்பிவைக்குமாறு, கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிக்கு அனுப்பிவைக்கப்பட்ட சுற்றுநிருபத்துக்கான பதில் கிடைத்தவுடன் விநியோகம் இடம்பெறும் என நல்லூர் பிரதேச சபை செயலாளர் எஸ்.வைரமுத்து தெரிவித்தார்.

கூடியவரை இன்னும் ஒருவாரத்தில் சத்துணவு விநியோகம் இடம்பெறலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டுவில் சத்திரன் கிராய் குளத்தை நியாப் குழுவினர் பார்வையிட்டனர்!

(நல்லூர்)

உலக வங்கி நிதியுதவியுடன் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படும் மட்டுவில் வடக்கு சத்திரன் கிராய் குளத்தை நேற்றுமுன்தினம் நியாப் குழு தலைவர் நிஹால் பெர்ணான்டோவும் - குழுவினரும் பார்வையிட்டனர்.

அன்று மதியம் இந்தக் குளத்தைப் பார்வையிட்டதுடன், அங்கு கூடிய மக்களிடம் குளம் புனரமைப்புச் சம்பந்தமாகவும், அதன் நன்மைகள் பலாபலன்கள் பற்றியும் கேட்டறிந்து கொண்டனர்.

நிஹால் பெர்ணான்டோவின் தொழில்நுட்ப உதவியாளர் ரவீந்திரன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் பாலகிருஷ்ணன், நுண்கருத்திட்டப் பணிப்பாளர் ஜெகநாதன், விவசாய உதவித் திட்டப் பணிப்பாளர் பாலசுப்பிரமணியம், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஜெயா, நீர்ப்பாசனப் பொறியியலாளர் கணேசராஜா, தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (24)

## பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சை ஆரம்பம

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி கலை முதற் பரீட்சை-2003 இன்று ஆரம்பமாகவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சை நிலையத்திலிருந்து பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டை, நேர சூசிகை என்பன அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்த மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் பரீட்சை நிலையம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இந்தப் பரீட்சைகள் செப்ரெம்பர் 19 ஆம் திகதி வரை நடைபெறும். (20)

## சமுர்த்தி வங்கி சங்கம் திறப்பு

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி வங்கிச் சங்கத்துக்கான புதிய கட்டடம் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்மாவட்ட மேலதிக அரச அதிபர் அ.சிவசாமி இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஊர்காவற்துறை பிரதேச செயலக அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (51)

## பெண்கள் உரிமை தொடர்பான கருத்தரங்கு

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டத்தினரால் இன்று பிற்பகல் 3 மணி முதல் 4 மணிவரை 106, 04 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் பெண்கள் உரிமை தொடர்பான கருததரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கை - பெண்கள் அபிவிருத்தி நிலையத் தலைவர் சறோஜா சிவச்சந்திரன் நிகழ்த்தவுள்ளார். இது பெண்கள் உரிமைகளைத் தெரிந்துகொள்ளுதல், பெண்கள் உரிமையின் முக்கியத்துவம், பெண்களுக்கான உரிமையை ஏற்படுத்தல் போன்ற கருத்துக்களை உள்ளடக்கியதாக அமையும். (44)

## பருத்தித்துறைப் பிரதேச செயலகம்

# பின்தங்கிய கிராமங்களில் அபிவிருத்திப் பணிகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் பின்தங்கிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, அங்கு மேற்கொள்ள வேண்டிய அடிப்படை வசதிகளை இனங்கண்டு, அதனைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கைகளை யு.என்.எச்.சி.ஆர். நிதியுதவியுடன் போரூட் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 6 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. துன்னாலை, துன்னாலை வடக்கு, வியாபாரி மூலை, புலோலி தென்கிழக்கு மற்றும் தம்பசிட்டியிலுள்ள இரு கிராமசேவகர் பிரிவுகளில் இந்தப் புனரமைப்புப் பணிக்கு - கிராமங்களின் பொதுக் கிணறுகள், மலசலகூடங்களை அமைப்பதுடன் பொதுமண்டபங்களையும் அமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

# திலீபன் நினைவுதின ஏற்பாட்டுக் கூட்டம்!

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் நினைவுதின ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம் - யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையில் இடம்பெற்றது.

தியாகி திலீபன் நினைவுதினத்தை சிறப்பாக அனுஷ்டித்தல் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கின்ற கூட்டம் யாழ்.மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமையன்று நடைபெறவுள்ளது.

சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பான இறுதித் தீர்மானங்கள் எடுக்கும் கூட்டம் ஒன்று, சபை மண்டபத்தில் தியாகி திலீபன் நினைவு தின ஏற்பாட்டுக்குழுவினரின் கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளதாக, யாழ்.மாவட்ட கூட்டுறவு சபை செயலாளர் பொ. சண்முகசுந்தரம் தெரிவித்தார்.

# முல்லைக் கடலில் தத்தளித்தவர்களை வடமராட்சி மீனவர்கள் காப்பாற்றினர்!

(முல்லைத்தீவு)

இயந்திரம் பழுதடைந்ததால், நடுக்கடலில் தத்தளித்த முல்லைத்தீவு மீனவர் இருவரை வடமராட்சி மீனவர்கள் காப்பாற்றியுள்ளனர்.

கடந்த சனியன்று முல்லைத்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்தப் பகுதி மீனவர்களான பாலசிங்கம் லதீபன் (வயது 20), மூன்று பிள்ளைகளின் தந்தையான வேலுப்பிள்ளை சிவநேசன் ஆகிய இருவரும் காணாமற் போயிருந்தனர்.

மீன்பிடித்துக்கொண்டு திரும்பிய வேளை இவர்களது மீன்பிடிப் படகின் வெளியிணைப்பு இயந்திரம் பழுதடைந்ததால், இவர்களது படகு அடித்துச் செல்லப்பட்டு கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த வேளை - வடமராட்சி மீனவர்கள் இவர்களை கரைக்கு அழைத்து வந்துள்ளனர்.

# துரித அபிவிருத்தி பணிகளுக்கு 25 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் துரித அபிவிருத்திப் பணிகளுக்கான ஆட்சேர்ப்பில் 25 பேர் நியமனம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற நேர்முகத்தேர்விலேயே இந்த 25 பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த நேர்முகத்தேர்வில் தொழில்நுட்பக் கல்லூரிகளில் கல்விச் சான்றிதழ் பெற்றோர் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் என சுமார் 175 பேர் பங்குபற்றியிருந்தனர்.

இவர்களில் கட்டட நிர்மாணத் துறைக்கான பணிகளை மேற்கொள்ள 5 பேரும், நீர்ப்பாசன வேலைத் திட்டங்களுக்கென 20 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பணி புரியவுள்ளனர் எனவும் - அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும் எனவும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்தார். (ப)

## நீராவியடியில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நீராவியடியில் வீட்டில் ஆட்கள் இல்லாதபோது, சமயம் பார்த்து துணிகரத் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்.நீராவியடியில் மாநகரசபையில் பொது சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றும் ஒருவரின் வீட்டில் கிட்டத்தட்ட 20 பவுண் நகைகளும், இரண்டரை லட்சம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது. (64)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புவியியல் கழகத்தின் கருத்தரங்கு தொடர் 04 இன்று பிற்பகல் 3 மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்டத்தின் அண்மைக்கால புனர்வாழ்வு, புனரமைப்பு செயற்பாடுகள் எனும் தலைப்பில் அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கருத்துரை வழங்கவுள்ளார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## முகமாலையில் அஞ்சலகம் இயங்கவுள்ளது

இடம்பெயர்ந்த நிலையில் கடந்த பல வருடங்களாக கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவந்த முகமாலை உப அஞ்சல் அலுவலகம், பளை அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் முகமாலைக் கிராமத்தை அண்டிய பகுதிகளில் வெகுவிரைவில் இயங்கவிருக்கிறது.

முகமாலை உப அஞ்சல் அலுவலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் அஞ்சல் தேவைகளைப் பெற்றுவந்த மக்கள் இதனால் நன்மையடைவர். (21)

## பல்கலை நூலகர் வெளிநாட்டிற்கு சுற்றுப்பயணம்

யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகர் ஒன்றரை மாத சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லவுள்ளார்.

இவர் தனது 35 வருட நூலக சேவையில் வெளிநாடு ஒன்றுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சுற்றுப்பயணத்தின் போது பிரதம நூலகராகிய றோகினி பரராஜசிங்கம் 'நூலக வளர்ச்சி' தொடர்பான மாநாடுகளிலும் பங்குபற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜி.ரி.இசற்றின் இரண்டாம் கட்ட கொடுப்பனவு வழங்கப்படுகிறது

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 175 குடும்பங்களுக்கு ஜி.ரி.இசற் நிறுவன்த்தால் வீடு கட்டிக்கொடுப்பதற்கான 2 ஆம் கட்ட கூலிக் கொடுப்பனவு 8100 ரூபா வீதம் வழங்கப்பட்டு வருவதாகப் பிரதேச செயலக அதிகாரி தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் முதற்கட்ட கூலிக் கொடுப்பனவு 2250 ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. 2 ஆம் கட்டக் கொடுப்பனவு கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (25)

## கால்வாய் நோய் தடுப்பூசி ஏற்றல்

தென்மராட்சிப் பகுதியில் மாடுகளுக்குக் கால்வாய் நோய்த் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருவதாக சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

கடந்த 21 ஆம் திகதி கொடிகாமம் வடக்குப் பகுதியிலும், உசன் கிராமசேவகர் பிரிவுக்கும், நாளை விடத்தற்பளை கிராம சேவகர் பிரிவுக்கும் கால்வாய் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக கால்நடை வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (25)

## கட்டைவேலி - நெல்லியடி சங்கத்தில் கூட்டுறவு தின விழா

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நடத்தும் 82 ஆவது கூட்டுறவு தின விழா இன்றும், நாளையும் காலை 9.30 மணி முதல் நண்பகல் 1.30 மணிவரை நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் த.சிதம்பரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், சிக்கன கடன் வழங்கல் கூட்டுறவு சங்க சமாசத் தலைவர் எஸ்.சிவசுப்ரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் புலமைப்பரிசில் வழங்கல், ஊக்குவிப்புக்கள், கௌரவிப்புக்கள், கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

## தெய்வீக கலை நிகழ்ச்சிகள்

வடமராட்சி ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு, சந்நிதியான் ஆசிரமத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக சமய நிகழ்ச்சிகள் தொடரில் இன்று காலை 10 மணிக்கு 'உதித்தனன் உலகம் உய்ய' என்னும் தலைப்பில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் ஆ.சிவநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (20)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்*

திருக்குறள்

# நமது நோக்கு

## கிழக்கு நிகழ்வுகளும், சமாதானக் கனவுகளும்

கிழக்கில் தற்போது இடம்பெற்றுவரும் சம்பவங்களின் எதிரொலியாக நாடுபூராகவும் ஒருவிதமான பதற்றமும், அச்சமும் கலந்த குழப்பமான நிலையொன்று உருவாகி பரந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கடந்த அரசின் ஆட்சி ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் சுயாதீனமாக அறிவித்திருந்த போர் நிறுத்தத்தை தொடர்ந்து, அரசும் அதனைப்பேணும் வகையில் உருவாக்கப்பட்ட போர் நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டைத் தொடர்ந்து கட்டியெழுப்பப்பட்ட சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நோக்கிலான அமைதிச்சூழலுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலையொன்றினை சமாதான எதிர்ப்புச் சக்திகளும், பேரினவாத வெறியர்களும் நன்கு திட்டமிட்ட வகையில் மெல்ல மெல்ல விஸ்தரித்து வருகின்றனர் என்பதையே அண்மைக்கால கிழக்கின் நிகழ்வுகள் நிரூபித்து வருகின்றன.

மீண்டும் ஓர் யுத்த சூறாவளிக்கான புயல் கிழக்கில் மையங்கொள்ள தொடங்கியுள்ளதை அமைதியையும் சமாதானத்தையும் ஆத்மார்த்தமாக நேசிக்கும் உலக சமூகம் கவலையுடன் கவனிக்கத் தொடங்கியுள்ளதை சமாதானம் தொடர்பாக அவர்கள் விடுக்கும் அறிவுறுத்தல்கள் உணர்த்திநிற்கின்றன.

ஆனால், பல தசாப்தங்களாக பேரினவாத சிந்தனைக்குள் ஊறி மந்த புத்தி கொண்டவர்களாக தம்மை மாற்றிக்கொண்ட சிங்களப் பெரும்பான்மைத் தலைமைகளுக்கு சமாதானம்-அமைதி ஆகிய சொற்களின் அர்த்தமானது ஒவ்வாமையை ஏற்படுத்தும் ஒன்றாக ஆகிவிட்டதன் பின்விளைவுகளையும்-பக்கவிளைவுகளையும் முன்னெப்போதையும் இப்போது தென்பகுதி மக்களே அனுபவிக்க தொடங்கியுள்ளன ரெல்லாம்.

போரின் பன்முனை அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து, அவற்றின் கொடுமைகளால் பாதிக்கப்பட்டு இழப்புகளைத் தாங்கி, சிங்கள ஆட்சியாளர்களின் அடக்குமுறை கொடுமைகளின் சகல பரிமாணங்களையும் அனுபவபூர்வமாகப் புரிந்துகொண்ட தமிழ் மக்களுக்கு சிங்களத் தலைமைகள் சமாதானம் பற்றி பேச வரும் போதே இது சாத்தான் ஓதும் வேதம் என்பது நன்கு தெரியும். இதே வேதத்தை பண்டாரநாயக்கா ஓதிக் கிழித்தெறிந்த விதத்தையும், டட்லி சேனநாயக்கா ஓதி பேக்காட்டிய தன்மையையும், சிறிமாவோ ஓதிக்கொண்டே குழிபறித்த தந்திரத்தையும், ஜே.ஆர் ஓதிக்கொண்டே அழித்த நயவஞ்சகத்தையும், பிரேமதாச ஓதிக்கொண்டே ஏமாற்ற முயன்ற யுக்தியையும், சந்திரிகா ஓதிக்கொண்டே கொத்திக் குதறிய ரூபத்தையும் கடைசியில் ரணில் பேசிக்கொண்டே காலங்கடத்திய கைங்கரியத்தையும் தமிழ் மக்கள் மறக்கவில்லை என்பதே உண்மை.

இப்போது மீண்டும் அதே ஜனாதிபதி சந்திரிகாதான் சமாதானத்தை வேறொரு பாணியில் ஓத ஆரம்பித்திருக்கின்றார் என்பதும், அது எத்தகைய கொடூரத்தில் போய் முடியும் என்பதும் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

எனவே, சமாதானம் மீதும் நிரந்தரமான அரசியல் தீர்வொன்றினை காண்பதற்கான சர்வதேச சமூகத்தின் ஆர்வம் மிக்க அனுசரணையின் மீதும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இருந்தாலும், அதனை முன்னெடுக்க வேண்டிய மறுதரப்பினரின் விசுவாசத்தின் மீது அவர்களுக்கு நிரந்தரமான சந்தேகமே உள்ளது.

மறுதரப்பினரான சிங்கள ஆடசிப்பீடத்தை காலங்காலமாய் பொறுப்பேற்று நடத்திவரும் பிரதான பெரும்பான்மைக் கட்சித் தலைமைகளால் எந்தக் காலத்திலும் சமாதானம் குறித்து உறுதியானதும், தீர்க்கமானதுமான தீர்மானம் ஒன்றை நியாய பூர்வமாக ஒருமித்த கருத்து நோக்கில் ஏற்படுத்தவே முடியாது.

இதனைக் கடந்த கால சம்பவங்கள் அனைத்தும் வரலாற்று நிகழ்வுப் பதிவுகளாகி உறுதிகூறி நிற்கின்றன.

இன்றைய கிழக்கின் அவலங்களுக்கு அரசும், அரசபடைகளும்தான் பிரதான காரணம் என்பதை உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் நோக்கர்கள் பலரும் மிகத் தெளிவாகவே- கர்ணா விவகாரத்தை சிங்கள அரசியல் தலைமைகள் கையாள முயன்ற வகையினை அடுத்து- புரிந்து கொண்டுள்ள நிலையில் இத்தகைய இரட்டைமுக அரசையும் முரண்நோக்கு கருத்து நிலைப்பாட்டினைக் கொண்டதான கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணியொன்றின் ஆட்சியையும் எவ்வாறு கையாள்வது என்று தெரியாமல் குழம்பிப்போயுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கெதிரான சக்திகளையெல்லாம் தம்வசமாக்கிக்கொண்டு, அவர்களை ஆயுத பாணிகளாக்கி, அவர்களுக்கு அரசியல் முக்கியத்துவம் வழங்கி சுயநல அரசியல் இலக்குகளை, பிரித்தாளும் தந்திரத்தை கையாண்டு அடையும் பெருவிருப்புடன் செயற்படும் ஓர் அரசை நம்பி சமாதானத்தை முன்னெடுப்பது என்பது எவ்வளவு ஏமாளித்தனமானது என்பதைத் தமிழர்கள் தெளிவாக தெரிந்துகொண்டேயுள்ளனர்.

இதனை சர்வதேச சமாதான வலியுறுத்திகள் சிந்தையில் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் வகையில் சமாதான எதிர்ப்பாளர்களை அரவணைத்துக்கொண்டு, ஆயுதக்குழுக்களுக்கு புகலிடம் அளித்து விடுதலைப்புலிகளுக்கெதிராக செயற்பட தூண்டியபடி, கிழக்கில் வன்முறைகளுக்கு அனுசரணையை மறைமுகமாக வழங்கும் ஓர் அரசால், சமாதான பேச்சுவார்த்தை மேசையில் இதய சுத்தியுடன் அமரமுடியமா என்பது சந்தேகமே. அப்படியே அமர்ந்தாலும் ஒரு நியாயமான தீர்வொன்றினை எட்டும் வரைக்கும் அதனால் பேச்சுக்களை தொடர முடியுமா என்பது அதனைவிட சந்தேகமே!

இந்தநிலையில் சமாதானம் குறித்த தனது நிலைப்பாட்டை தெளிவாகவும்- உறுதியாகவும் அதேவேளை இறுதியாகவும் சிங்களப் பெரும்பான்மை தலைமைகள் ஒருமித்து ஒரே குரலில் சர்வதேச சமூகத்திடம், சமாதான அனுசரணையாளர்களிடம், பகிரங்கமாகப் பிரகடனம் செய்து சத்தியவாக்கு கொடுக்காத வரையில் சமாதானம் குறித்துப் பேசுவது என்பது தமிழ் மக்களை மறுபடியும் ஏமாற்றும் நடவடிக்கையாகவே இருக்கும்.

# நாடும் நடப்பும்

செய்தி:-
இனப்பிரச்சனை தொடர்பாக தீர்க்கமான முடிவை எடுக்குமாறு
அரசுக்கு ஐ.தே.கட்சி வலியுறுத்து.



# பிரதேசவாதப் போர்வைக்குள் மாற்று தமிழ் ஆயுதக்குழுக்கள்

## இணையத்தளத்தில் செய்தி

கிழக்கில் கருணா சம்பந்தமான விவகாரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டாலும், அந்தப் பிரச்சினையைத் தொடர்ந்தும் இருப்பதுபோல் காட்டத் தமிழ் ஆயுதக் குழுக்களும், அவற்றின் ஆதரவு சக்திகளும் முயன்று வருகின்றன என இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கிலங்கை மக்களைப் பற்றிய கருத்துக்களை வெளியிட்டு, புலிகளுக்கு எதிரான கருத்துக்களைத் திணிக்கும் இந்தச் செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள், தங்களைக் கிழக்கிலங்கை வாழ் தமிழர்கள் போலவே சித்தரித்து வந்தனர்.

ஆனால், இந்த நடவடிக்கைகளைச் செய்யும் யாருமே கிழக்கிலங்கையைச் சாராதவர்கள் என்றும், அவர்கள் கிழக்கிலங்கையில் பிரச்சினைகளைத் தூபமிடவும், சமாதான முயற்சிகளைக் குழப்பவுமே இவ்வாறு செயற்படுவதாகத் தெரிய வருகிறது. கருணா உண்மையாகச் செயலிழந்தபோதும், கருணா அம்மான் தலைமையில் தொடர்ந்து இயங்குவோம் என்ற போர்வையில் பிரதேசவாதக் கருத்துக்களைப் பரப்பும் செயற்பாட்டில் முற்றுமுழுதாகச் சந்திரிகாவின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு ஆயுதக்குழுவும், அதன் தலைவருமே ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களே கருணாவின் குழு என்ற போர்வையில் ஒரு இணையத்தளத்தை உருவாக்கி, விசமத்தனமான செய்திகளைப் பரப்பிவருகிறார்கள் என்றும், தங்களது பணத்தில் வாழும் தமிழரொருவரினால் ஆங்கில இணையதளத்தில் கருணாவின் பெயரிலான செய்திகளை வெளியிட்டு வருகிறார்கள் என்றும் நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

அதேவேளை அந்த அமைப்பில் உறுப்பினர்களாக இருந்தவர்களால் வெளிநாடொன்றில் இருந்து இயக்கப்படும் தமிழ் வானொலியொன்றின் மூலம் பிரதேசவாதக் கருத்துக்களைப் பரப்பும் செயல்களை இந்த ஆயுதக்குழு செய்து வந்ததும், அதனை ஒருபடி விஸ்தரித்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஊடாக அந்தக் கருத்துக்களை ஒலிபரப்பியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வடபகுதி மக்களை விரோதிகளாக்கும் இனவெறிக் கருத்துக்களையும், செயல்களையும் செய்துவரும் இவர்கள் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்ற போர்வைக்குள் ஒழிந்துகொண்டு தங்களது மக்களையே தற்போது சந்திரிகாவின் அரசியலுக்குப் பலியாக்குகிறார்கள் என்பதும் தமிழரின் வரலாற்றுப் போக்கில் புதியதொரு துரோகமாகவே ஊடகவியலாளர்களால் கருதப்படுகிறது. இதேவேளை கடந்த காலங்களில் சந்திரிகா நாட்டில் இல்லாதபோது இராணுவப் புலனாய்வுத்துறையின் நடவடிக்கைகள் அதிகரித்தே காணப்பட்டன. இந்தமுறை அவர் இல்லாதபொழுது இவ்வாறான செயல்கள் அதிகரிக்கலாம் என அந்த இணையத்தளம் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

# நிவாரண விநியோகம் சீரின்மை பொதுமக்கள் தரப்பில் விசனம்!

(யாழ்ப்பாணம்)

உலர் உணவு நிவாரண விநியோகம் சீரின்றி நடைபெறுவதால் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. யாழ்.மாவட்டத்தில் வாழ்பவர்களில் பெரும்பாலானோர் நிவாரணத்தை நம்பியே வாழ்க்கை நடத்துகின்ற நிலையில் இவ்வாறு நிவாரண விநியோகம் சீரின்றி நடைபெறுகின்றமையால் பெரும்பாலான மக்கள் வறுமையில் வாடவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது ஓகஸ்ட் மாதம் முடிவடையும் நிலையிலும்கூட, மார்ச மாத நிவாரணமே பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. நிவாரணம் நிறுத்துவதற்கான முயற்சிகள் கடந்த ஏப்ரல் மாதம் அரசால் முன்னெடுக்கப்பட்டபோதிலும், பொதுமக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன் பேரணி ஒன்றையும் நடத்தினர்.

இதனையடுத்து தொடர்ச்சியாக ஆறுமாதங்களுக்கு நிவாரண விநியோகம் சீராக நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டபோதிலும் மார்ச்மாத நிவாரணத்தின் விநியோகமே தற்போது மந்தகதியில் நடைபெறுகின்றது. இந்த நிலையில் பெரும்பாலான ஏழைக்குடும்பங்க்ள் பட்டினித் துயரத்தை எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ளது.

இது குறித்து யாழ்.செயலக புனர்வாழ்வுக் கிளையினருடன் தொடர்புகொண்டு கேட்டபோது - அமைச்சரவை அங்கீகாரப்படியே செயற்படுவதாகவும், வழங்கப்பட்ட அனுமதிக்கான நிவாரணமே தற்போது விநியோகிக்கப்படுவதாகவும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சில சரியானமுறையில் செயற்படாமையும் நிவாரண விநியோகத் தாமதத்துக்குக் காரணம் எனவும் தெரிவிததுள்ளது.

(ப)

# கொழும்புத் துறைமுகத்தில் அமெரிக்கா அணுக்கதிர் சாதனத்தைப் பொருத்தவுள்ளது

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் துறைமுகத்தில் அணுக்கதிர் பரிசோதனைச் சாதனத்தை அமெரிக்கா பொருத்துவதற்கான உடன்பாடொன்று எட்டப்பட்டுள்ளதாக இலங்கையின் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையின் தலைவரும், அமைச்சுச் செயலாளருமான திலக் ரணவி ராஜா தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

அண்மையில் துறைமுக மற்றும் விமானத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அமெரிக்காவுக்குச் சென்றபோது இது தொடர்பான பேச்சுக்களை நடத்தி ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளார்.

அமெரிக்க அரசாங்கம் இந்த அணுக்கதிர்ப் பரிசோதனைச் சாதனத்தைக் கொழும்புத் துறைமுகத்தில் விரைவில் பொருத்துமெனவும், இதன்மூலம் கொழும்புத் துறைமுகத்துக்குள் அணுகதிர்வீச்சுப் பொருட்களைக் கொண்டுவரும் கப்பல்கள் இனங்காணப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிராம அலுவலர்கள்— புதன் தவிர்ந்த வாரநாட்களில் அலுவலகத்தில் இருக்க வேண்டும்

## அரசு சுற்றுநிருபம் தெரிவிப்பு

(கொழும்பு)

கிராம உத்தியோகத்தர்களின் அலுவலக நாட்கள் மற்றும் நேரங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. பொது நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இந்தத் திருத்தங்களைச் செய்துள்ளது.

இதற்கமைய புதன்கிழமைகளிலும் ஓய்வு தினங்களை தவிர, ஏணைய அனைத்து வார நாட்களிலும் கிராம உத்தியோகத்தர்கள் காலை 9 மணி முதல் நண்பகல் 12.30 வரை அலுவலகத்தில் தங்கியிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அலுவலக நாட்களில் பிற்பகலில் வேறு அலுவல்கள் இல்லாவிட்டால் அந்த நாட்களிலும் கிராம உத்தியோகத்தர்கள், அலுவலகத்தில் தங்கியிருக்கவேண்டும். அலுவலக நேரங்களில் அத்தியாவசிய கடமைகளின் நிமித்தம் வெளியே செல்ல நேரிட்டால், அதற்கு பிரதேச செயலாளரின் முன் அனுமதி பெறவேண்டும் என்றும் பொது நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சு விடுத்துள்ள சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனகரவி

# சொந்த இடம் திரும்பும் மக்களின் பயணம் பாதுகாப்புடையதாக இருக்கவேண்டும்




ஈழத்தமிழர் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்து பல்வேறு துயரங்களைச் சுமந்தவர்களாக நூற்றுப் பதின்மூன்று முகாம்களில் வாழ்கின்றார்கள். தற்போதைய சூழ்நிலையில் சொந்த மண்ணுக்கு திரும்புபவர்களின் பயணம் உயிரைப் பறிகொடுக்கக் கூடிய மரணப் பயம் கொண்ட பயணமாக அமைந்துள்ளது. தலைமன்னாரி லிருந்து தமிழ் நாட்டிற்குத் தஞ்சம் புகுந்த முனைய காலத்திலும் ஆபத்தான கடற் பயணத்தையே செய்தனர். அதற்கு ஒரு காரணமாக சொந்த மண்ணில் போர் அமைந்தது. இங்கு உயிர் வாழ் வதற்கு அச்சம் என்ற நிலை ஏற்பட்டதனால் ஆபத்தான கடற் பயணத்தை மேற்கொண்டு உயிர் வாழ்ந்தால் போதும் என்ற நிலையில் தமிழ் நாட்டுக்குள் தஞ்சமடைந்தனர்.

அங்கு அவர்களின் வாழ்வில் உயிர்வாழ்கின்றோம் என்பதைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை. இதனால் படிப்படியாக மன்னார் கரையை வந்தடையத் தொடங்கினர். கடுமையான சண்டை இங்கு நடந்து கொண்டிருக்கும் போதே சில குடும்பங்கள் வந்துள்ளதை மன்னார் அரச பணிமனையின் பதிவு உறுதி செய்கின்றது.

மக்கள் மீண்டும் வரத் தொடங்கியதால் அவர்களின் பயணத்தை பாதுகாப்புடையதாக்க வேண்டுமென கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. ஏழாயிரம் தொடக்கம் பத்தாயிரம் வரையிலான பணத்தை அறவிட்டு சிறிய மீன்பிடிப் படகுகளில் அளவுக்கதிகமான ஆட்களையும் ஏற்றிவரும் படகோட்டிகள் சிலவேளை மண் பிட்டிகளில் இறக்கிவிட்டுப் போகின்றனர்.

மன்னார். அரசஅதிபர் வி.விஸ்வலிங்கம் கூறுகின்றார் மண்பிட்டிகளில மக்களை இறக்கிவிட்டுப் போவதால் உயிரிழப புக்களும் ஏற்பட்டுள்ளன என்று ஆகவே இதற்கு மாற்று வழி இரண்டு அரசாங்கங்களும் தீமானித்து படகுச் சேவையொன்றை நடத்தலாமெனக் கூறுகின்றனர்.

மன்னார், மதவாச்சி வீதியை எப்படியாவது பல நடவடிக்கைகள் மூலம் படையினர் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருவதற்கு முன்னர் மன்னாரிற்கும் கற்பிட்டிக்கும் இடையில் ஏழு மணி நேரம் கொண்ட படகுச் சேவையொன்று நடைபெற்றது. அதே போல் படகுச் சேவையொன்றை தலைமன்னாரிற்கும், இராமேஸ்வரத்திற்கும் இடையில் நடத்துவதென்றால் நான்கு மணிநேரம் காணும் மக்களின் உயிர்கள் வீணாவதும், அவர்களின் பணம் விரயமாவதும் தடுக்கப்பட வேண்டும் எனின் பயமற்ற படகுச் சேவை யொன்றை ஒழுங்கு செய்து கொடுப்பது அவசியமெனவும் அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார். .

இது தொடர்பாக இரண்டு அரசுகளும் கவலைப்பட்டதாக இல்லை. இலங்கை அரசு தமிழர் தானே எனச் சிலவேளை மௌனமாக இருக்கலாம். ஆனால், இந்திய அரசு இந்த விடயத்தில் கவனம் செலுத்தாதது ஏன்? அவர்களும் தமிழர் தானே எனப் பேசாமல் இருந்து விட்டனரோ எனக் கேட்க வேண்டியதாக இருக்கின்றது.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் UNHCR இடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். எமது மக்களை பாதுகாப்பாக சொந்த இடத்திற்கு வருவதற்கு ஒழுங்கு செய்ய விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கும் ஆக்க பூர்வமான பதில் வழங்கப்படவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் இந்த விடயத்தில் கவனம் செலுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப் பட்டது. இதுவரையிலும் அவர்கள் வாய்திறக்கவில்லை மக்களின் பிரதிநிதிகள் இந்த மக்களின் பிரச்சினைகளை கவணத்தில் எடுக்க வேண்டுமல்லவா?

1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2003 ஆம் ஆண்டு வரை 1285 குடும்பத்தினர் வந்துள்ளனர். ஐந்தாண்டுகளில் இவ்வளவு தொகையானவர்கள் வந்துள்ளனர். ஆனால், 2004 ஆம் ஆண்டு ஆறாம்மாதம் வரையில் 1500 குடும்பத்தினர் வந்துள்ளனர்.(முழு விபரத்தையும் அட்டவணையில் பார்க்கவும்) ஆகவே கூடுதலாக இந்த மக்கள் திரும்பி வருவதை கவனத்தில் எடுத்து அவர்களது பயணத்தை இலகுவாக்க வேண்டும்.

உயிரைக் காத்துக் கொள்ளவென தமிழ்நாட்டுக்குள் தஞ்சமடைந்தவர்கள் இன்று ஏதோ நம்பிக்கையுடன் மீண்டும் சொந்த இடம் திரும்புகின்றனர். இவர்களிடம் மீள் வருகை பற்றிக் கேட்டபோது பலரும் தமது சொந்த அனுபவங்களைச் சொல்லும் போது இன்னுமொரு போர் வந்தாலும் பரவாயில்லை இங்கிருந்து அகல மாட்டோமெனக் கூறுகின்றனர். உண்மையில் ஒரே வார்த்தையில் இவர்கள் இப்படிச் சொல்வதற்கு ஏராளமான காரணம் இருக்கிறது.

திருச்சியோ, நாகபட்டினமோ, ஈரோடோ எங்கும் நிவாரணத்தை மட்டும் பெற்று வாழ்வதென்பது மிகவும் கடினமாகும். மீன் கழிவு அள்ளுவது, தவிட்டு மில்லில் வேலை, கல்லுடைத்தல் என பிள்ளைகளின்படிப்பு ஏனைய செலவு என உயிரைக் கொடுத்துத்தான் வேலைசெய்யவேண்டியிருந்துள்ளது. இவர்களின் துயரை நேரில் பார்த்தபோது, கேட்கக்கூடிய கேள்வி இப்படியான துயரை அனுபவித்துக்கொண்டு ஏன் இன்னும் இங்கிருக்கிறீர்கள் என்பதேயாகும்.

ஒரு மனிதனின் வாழ்வில் எப்படியான தன்மை இருக்கவேண்டும் என்பதற்கு இவர்களின் வாழ்வைப் பார்க்கும்போது உடன் மனதில் பொறிதட்டுவது வாழ்வதற்கு பொருள் வேண்டும் வாழ்விலும் பொருள் வேண்டும். என்பதேயாகும்.

ஒரு காலத்தில் உயிருக்கு அஞ்சிப் போனவர்கள் இன்று இன்னொரு செய்தியையும் அண்மையில் தந்தார்கள். பொருள் தேட மத்திய கிழக்குக்கு வேலை வாய்ப்புத் தேடி இதே கடல்வழிப் பயணத்தை மேற்கொண்டு வந்தவர்கள். அத்தனை பேரும் இளம் பெண்கள் இங்கிருந்து சிறுமிகளாக பெற்றோருடன் போனவர்கள் சொந்த இடம் எப்படியிருக்கும் என்ற நிலை அறியாதவர்கள் சொந்த இடத்தில் ஏமாற்றப்பட்டதனைக் காணமுடிந்தது. இவற்றில் மன்னார் ஆயர், அரசியற்துறைப் போராளிகள் தலையிட்டு சுமுகமான உடனடித்தீர் வொன்றைக் கண்டார்கள்.

இதில் இவர்கள் தமிழ் நாட்டிலிருந்து ஏன் வந்தவர்களெனப் பார்போமானால்... தமது வாழ்கையினை சீரமைக்க அல்லது முன்னேற்ற பொருளாதாரம் இல்லையென்பதனைத் தவிர வேறு எந்தக் காரணத்தையும் அவர்களால் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை.

சொந்த இடத்திலிருந்து உயிர் வாழ்வதற்கு அஞ்சிப் போனவர்கள் இன்று பொருளாதாரப் பிரச்சினையை முதன்மைக் காரண மாகச் சொல்லுகின்றனர் என்றால் அந்த மக்களை ஏதோ ஒரு வகையில் துன்பம் வாட்டுகின்றது என்றுதானே அர்த்தம்.

ஆகவே, உண்மையில் மக்களுக்கு என்ன பிரச்சினை உள்ளதென்பதை மிகவும் கரிசனையுடன் கவனத்திலெடுத்து அவர்களுக்கு உதவவேண்டும்.

இன்னுமொரு பிரச்சினையாக 1994 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து மக்கள் வரும்போது ஏராளமான உதவிகள் கிடைத்தன. இன்றைய சூழ்நிலையில் வருகின்றவர்களிற்கு எதுவித உதவிகளும் வழங்கப்படவில்லை. அத்துடன் இங்கு வந்தவுடன் அவர்களின் வீடுகள் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் என்றும் கேள்விப்படுகின்றனர்.

ஆகவே, அந்த மக்களையும் பொருட்டாக மதித்து நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் எந்தச் சாட்டையும் கூறாமல் முடிவொன்றை எடுத்து அதன்படி செயற்படுவதே மனிதாபிமானமுடைய பணியாகும்.

**தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பிய ஈழத்துத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை ஆண்டு வகையில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது**

| ஆண்டு, மாதம் | மொத்தம் | | மன்னார் மாவட்டம் | | ஏனைய மாவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | குடும்பம் | உறுப்பினர்கள் | குடும்பம் | உறுப்பினர்கள் | குடும்பம் | உறுப்பினர்கள் |
| 1999 | 47 | 102 | 21 | 48 | 26 | 54 |
| 2000 | 10 | 19 | 10 | 19 | 0 | 0 |
| 2001 | 20 | 39 | 11 | 24 | 9 | 15 |
| 2002 | 237 | 474 | 113 | 254 | 124 | 220 |
| 2003 | 971 | 2029 | 704 | 1811 | 267 | 218 |
| 2004 தைமாதம் | 176 | 465 | 99 | 292 | 77 | 173 |
| மாசி மாதம் | 145 | 371 | 101 | 257 | 44 | 114 |
| பங்குனி | 189 | 381 | 121 | 218 | 68 | 163 |
| சித்திரை | 322 | 823 | 201 | 541 | 121 | 282 |
| வைகாசி | 301 | 849 | 208 | 523 | 93 | 326 |
| ஆனி | 367 | 901 | 212 | 701 | 155 | 200 |
| இறுதி மொத்தம் | 2785 | 3465 | 1801 | 4688 | 984 | 1765 |

# அன்புக்குரியவர்களை அரவணைக்க வெஸ்டன் யூனியன் உதவுகிறது

செலான் வங்கி

செலான் வங்கி இலங்கையில வெஸ்டன் யூனியனின் பிரதான முகவராக 1993 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டதிலிருந்து அதன் பணப்பரிமாற்றல் சேவையை மேற்கொண்டு வருகிறது. அதிலிருந்து இந்தச் சேவை பிரபல்யமடைந்து வருவதால் அதிகரித்துவரும் கிராக்கியை சமாளிப்பதற்காக, செலான் வங்கி இந்தத் தனித்துவமான சேவையை வழங்க மக்கள் வங்கி, செலிங்கோ சேமிப்பு வங்கி ஆகியவற்றையும் இணைத்துக கொண்டது. 'போர்சூன் 500' கம்பனியான பர்ஸ்ட் டேற்றா கோர்பரேஷன் நிறவனத்துக்குச் சொந்தமான வெஸ்டன் யூனியன் உலகெங்கிலும் 1,55,000 கருமபீடங்களைக் கொண்டுள்ளது.

செலான் வங்கியின் வியாபார அபிவிருத்திப் பிரிவுப் பிரதிப் பொது முகாமையாளர் திரு.வி.கே.சியோன் இந்தச் சேவையின் முக்கியத்துவத்தை எடுத்து விளக்குகையில் வெஸ்டன் யூனியன் இந்த வலையமைப்பில் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப பணப்பரிமாற்றல் செய்கிறது என்று கூறினார்.

வெஸ்டன் யூனியனின் சேவை உயர் வகுப்பினருக்குரியது என்பது பொதுவான கருத்து. ஆனால், இது தவறானது. தாழ்ந்த வகுப்பு அலுவலக சேவையாளர்கள் முதற் கொண்டு உயர்வகுப்புக் கைத் தொழில் சேவையாளர்கள் வரை அனைவருக்கும் பயன்படுவதே வெஸ்டன் யூனியன் சேவையாகும். பணமாற்றலும் அநேகமாக உடனடியாகவே இடம்பெறும் என்றும் சியோன் கூறினார்.

பல வழிகளாலும் நாட்டுக்கு வந்துசேரும் பணத்தினால் பொருளாதாரம் விருத்தியடைவதுடன வேகமாகவும், பாதுகாப்பாகவும், சேமிக்க இலகுவாகவும், பண மாற்றலை மேற்கொள்வது என்ற உறுதிமொழியை வெஸ்டன் யு,னியன் அர்ப்பணிப்புடன் காப்பாற்றி வருகிறது. இலங்கையர்கள் மத்தியில் வெஸ்டன் யூனியன் சேவையை ஊக்குவித்துவரும் செலான் வங்கி இந்த வருடம் குறிப்பாகப் புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்கள் கூடுதலாக வாழும் நாடுகளில் பல வெளியக ஊக்குவிப்புக்களைப் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

தாழ்ந்த வகுப்பு அலுவலக சேவையாளர்களும், உயர்வகுப்புக் கைத்தொழில் சேவையாளர்களும் இந்தச் சேவையைக் கிரமமாகப் பயன்படுத்தும் வகையிலும் வளைகுடா, பிரித்தானியா, அமெரிக்கா, ஜேர்மனி, லெபனான், சைப்ரஸ் ஆகிய நாடுகளில் விசேட கட்டணங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இலச்சினை முகாமையாளர் ஜனாநயினா மரிக்கார் இந்தத் திட்டத்தின் வளர்ச்சி குறித்துப் பேசுகையில்- விசுவாசமான வாடிக்கையாளர்கள் வெஸ்டன் யூனியனை ஒரு பணமாற்றல் நிறுவனமாக நினைப்பதிலும் பார்க்க தாயகத்திலுள்ள தங்கள் அன்புக்குரியவர்களை இணைக்கும் ஒரு பாலமாகவே கருதுகிறார்கள் என்று கூறினார். செலான்வங்கி வெஸ்டன் யூனியன் மூலம் இலங்கைக்கு வருடாந்தம் 150,000 பணமாற்றல்களை மேற் கொள்கிறது என்பதும் இங்கு குறிப் பிடத்தக்கது என்றும் இவர் கூறினார்.

அண்மையில் இந்திய மாநிலமான ராஜஸ்தானில் நடைபெற்ற வெஸ்டன் யூனியன் ஆசிய பிராந்திய மகாநாட்டில் 'சர்வதேச புலம் பெயர் தொழிலாளர் சேவை - 2003' ஆம் ஆண்டுக்கான கேடயத்தை செலான் வங்கி பெற்றுக்கொண்டது.

சிலிங்கோ செலான் டவரில் அமைந்துள்ள செலான் வங்கி தலைமைக் காரியாலயத்திலும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள செலான் வங்கி கருமபீடத்திலும் வருடம் 365 நாட்களிலும் 24 மணித்தியாமும் வெஸ்டன் யூனியன் நிலையம் இயங்கி வருகிறது.

பல வருடங்களாக உலகெங்கிலும் வாழ்ந்துவரும்/தொழில் பார்த்துவரும் இலங்கை யர்களின் பணப் பரிமாற்றலுக்கு மிக்க வசதியான ஊடகமாகவ வெஸடன யூனியனை செலான் வங்கி வளர்த்துள்ளது.

பல புலம்பெயர் இலங்கையர்கள் இங்குள்ள தங்கள் அன்புக் குரியவர்களுக்கு பணம் அனுப்பி வருவதையடுத்து, இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் பணம் 100 பில்லியன் ரூபாவுக்கு மேலாக அதிகரித்ததால் - வேகமாகவும், பாதுகாப்பாகவும், நம்பகமாகவும் பணப் பரிமாற்றம் செய்யும் வழிமுறை ஒன்றுக்கான அவசியம் உணரப் பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தையும், சென்மதி நிலுவையையும் கருத்திற் கொண்டு இத்தகைய சேவை ஒன்றின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. பணப்பரி மாற்றலுக்கும், கிடைத் தலுக்குமான நேரம் 15 நிமிடங்களுக்கு உள்ளாக இருக்கும். மேலும், அனுப்பியவர் பணத்தைப் பெற்றுக் கொண்டமை குறித்து அநேகமாக உடனடியாகவே அறிந்துகொள்ளும் வாய்ப்புண்டு. ★

# புதிய ரொக்கட்டை இந்தியா தயாரித்தது



(டெல்கி)

தகவல் தொடர்பினை வலுப்படுத்தும் நோக்கில் செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தும் புதிய ரொக்கட் ஒன்றை இந்தியா வடிவமைத்துள்ளது.

ஜி.எஸ்.எல்.வி. - எம்.கே. 3 என்ற புதிய வகை ரொக்கட்டையே இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவகனமான இஸ்ரோ வெற்றிகரமாக தயாரித்துள்ளது.

இந்த ரொக்கட் நான்கு தொன் எடையுள்ள செயற்கைக் கோளை விண்ணிற் செலுத்தும் திறன் கொண்டது.

ஏற்கனவே இந்தியா தயாரித்துள்ள ஜி.எஸ்.எல்.வி. ரொக்கட்டின் திறனை மேலும் அதிகரிக்கச்செய்து இந்தப் புதிய ரொக்கட் உருவாக்கப்பட்டுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த ரொக்கட் 2007 மற்றும் 2008ஆம் ஆண்டுகளில் விண்ணில் செலுத்தப்படுமென இஸ்ரோ தலைவர் மாதவன் நாயர் தெரிவித்தார்.

# 2 குழந்தைகளுக்கு மேல் பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிடத் தடைவிதிக்குக

## இந்திய உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

2 குழந்தைகளுக்கு மேல் பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிட தடைவிதிக்கக் கோரி, டெல்கி உயர் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதற்கு பதில் அளித்து பிரமாண பத்திரம் தாக்கல் செய்யும்படி மத்திய அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

ரவிபிரசாத் குப்தா என்ற சட்டத்தரணி உயர் நீதிமன்றில் பொது நல வழக்கு ஒன்றை தொடர்ந்திருக்கிறார். அவர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது-

மக்கள் தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்த குடும்பத்துக்கு 2 குழந்தைகள் திட்டத்தை அமுல்படுத்த உத்தரவிடவேண்டும். நாட்டின் குடிமக்களுக்கு பல நோக்கு அடையாள அட்டை வழங்குவதை கட்டாயமாக்க வேண்டும். 2 குழந்தைகளுக்கு மேல் பெற்றவர்கள் நாடாளுமன்றம், சட்டமன்றம், நகரசபை மற்றும் பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட தடைவிதிக்க வேண்டும்.

2000ஆவது ஆண்டில் வெளியான தேசிய மக்கள் தொகை கொள்கையில் இரு குழந்தைகள் திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த கொள்கை அறிவிப்பை அதிகாரபூர்வமாக பிரகடனப்படுத்தி, அதன்பின் 10 மாதங்களுக்கு பிறகு இதை மீறுபவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாதபடி தடை விதிக்க வேண்டும்.

மேலும், அவர்களுக்கு அரசு வழங்கும் வேலைவாய்ப்பு ஒதுக்கீடு, ரயில், பஸ், வீட்டுவசதி, வீட்டுமனை, எரிபொருள் ஒதுக்கீடு போன்றவைகளில் சலுகைகள் அனைத்தையும் ரத்துச் செய்யவேண்டும். மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக சட்டபூர்வமான கண்காணிப்பை தொடங்கவேண்டும்.

குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டம், கடந்த 1952ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டபோதிலும், மக்கள் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதில் அரசு தோல்வி அடைந்துவிட்டது. எனவே, இரு குழந்தைகளுக்கு பதிலாக சீனாவைப் போல் 'ஒரு குடும்பம் ஒரு குழந்தை' என்ற திட்டத்தை பிரசாரம் செய்ய வேண்டும் என அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நோக்கு

## டர்பூர் பிரச்சினைத் தீர்வு சூடான் அரசின் முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது

சூடானின் டர்பூர் பிரதேச நெருக்கடிகளைத் தீர்க்க அந்த நாட்டு அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சூடானுக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜக சிரோ தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

டர்பூர் பிரதேசத்தின் பாதுகாப்பை சூடான் அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே தமது வீடுகளிலிருந்து வெளியேறி அகதி முகாம்களில் தங்கியுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் மீளவும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவர்.

சர்வதேச அளவில் சூடானுக்கெதிரான நடவடிக்கை எடுக்கும் முடிவை இறுதி செய்யுமுன் சூடான் அதிகாரிகள் தேவையானவற்றை செய்துள்ளார்களா என்பதனை ஐ.நா. செயலாளர் கோபி அனானே தீர்மானிக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## அபுகிறாப் கைதிகள் துன்புறுத்தல்

# அமெரிக்கப் பாதுகாப்பு செயலரும் சாட்சியமளிக்க வேண்டுமாம்

## சட்டத்தரணிகள் கோரிக்கை



அபுகிறாப் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைத் துன்புறுத்தியது தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அமெரிக்க சார்ஜண்ட் ஒருவரின் சட்டத்தரணிகள் இவரது வழக்கில் அமெரிக்கப் பாதுகாப்பு செயலர் டொனாலட் ரம்ஸ்பீல்ட் சாட்சியமளிக்க வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

அபுகிறாப் சிறையிலுள்ள கைதிகளை மிகக் கொடூரமான முறையில் தாக்கி துன்புறுத்தினர் எனத் தெரிவித்து, அமெரிக்கப் படையைச் சேர்ந்த 26 வயதுடைய சார்ஜன்ட் ஜெறைவ் டேவிற் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார்.

தற்போது இந்த சார்ஜன்ட் மற்றும் மூன்று அமெரிக்க வீரர்கள் ஜேர்மனியிலுள்ள அமெரிக்கப் படைத் தளத்தில் வழக்கு நடைபெறுவதற்கு முன்னதாக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கைதிகளிடம் குறுக்கு விசாரணை செய்து மேலதிக தகவல்களைப் பெறுமாறு மேலதிகாரிகள் விடுத்த கட்டளையை அடுத்தே இந்த இராணுவ சார்ஜன்டும் மற்றும் மூன்று படையினரும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக இவர்கள் சார்பாக ஆஜராகும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.



# 2 அமைச்சர்களை இலக்கு வைத்து ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல்



(பக்தாத்)

ஈராக் இடைக்கால அரசின் இரண்டு அமைச்சர்களை இலக்கு வைத்து இரு வேறு இடங்களில் நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில், அமைச்சர்கள் இருவரும் உயிர்த் தப்பியதுடன், அவர்களது மெய்ப்பாது காவலர்கள் உயிரிழந்தனர்.

முதலாவது தாக்குதல் சுற்றாடல்துறை அமைச்சர் மிஸ்கினை இலக்கு வைத்து நடத்தப்பட்டது. இதில் அவர் உயிர்த் தப்பியதுடன் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் நால்வர் கொல்லப்பட்டனர்.

நஜஃவ் நகரில் அவதிக்குள்ளாகியுள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் குடிநீர் போன்றவற்றை விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே தன்மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

மற்றைய தாக்குதல் பாக்தாத்தில் அமைந்துள்ள கல்வி அமைச்சரின் அலுவலகத்துக்கு முன் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் கல்வி அமைச்சரின் மெய்ப்பாது காவலர் ஒருவர் உயிரிழந்தார்.

இதேவேளை, இமாம் -அலி பள்ளிவாசலில் தங்கியுள்ள சதார் ஆதரவுப் படையினருக்கெதிராக அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய இந்தத் தாக்குதல்களில் 15இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில்

# இடம்பெற்ற குண்டுவெடிப்பை கண்டித்து பங்களாதேஷில் நேற்று வேலை நிறுத்தம்



பங்களாதேஷில் கடந்த சனியன்று எதிர்க்கட்சித் தலைவர் ஷேக் கசீனா கலந்து கொண்ட கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தை எதிர்த்து எதிர்க்கட்சியினர் நேற்று வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், அங்கு அரச அலுவலங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் இயங்கவில்லை. அத்துடன் எவ்வித போக்குவரத்துச் சேவையும் இடம்பெறவில்லை.

தலைநகர் டாக்காவில் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை பாவித்ததுடன், தடியடிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

அத்துடன், வீதியில்சென்ற ரிக்ஷா வண்டிகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டவேளை, பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனர்.

இதில் ஆர்ப்பாட்டக்காரர்கள் 12 பேர் காயமடைந்தனர்.எதிர்க்கட்சித் தலைவரின் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பினைக் கண்டித்து நேற்றும், இன்றும், முழு அளவில் வேலை நிறுத்தம் நடத்துமாறு எதிர்க்கட்சிகள் விடுத்த அழைப்பினை அடுத்தே நேற்று பங்காளதேஷில் முழு அளவில் வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது. இன்றும் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்படுமென எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 19 பேர் கொல்லப்பட்டும் 150இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததும், கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் எதிர்க்கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வீதித் தடையை மாவோயிஸ்டுகள் நீக்கினர்

நேபாள தலைநகர் காத்மண்டுவைச் சுற்றி கடந்த ஒருவார காலமாக தாம் நடத்திய முற்றுகைப் போரை நீக்குவதாக மாவோ கிளர்ச்சிவாதிகள் அறிவித்துள்ளனர்.

மனித உரிமைப் பிரதிநிதிகள், வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களின் கோரிக்கைக்கு இணங்க இன்றிலிருந்து ஒருமாத காலத்துக்கு இந்த முற்றுகைப் போர் நீக்கப்படுமென அவர்கள் தெரிவித்தனர்.

நேபாள சிறைகளிலுள்ள தமது அமைப்பின் உறுப்பினர்கள் விடுதலை செய்யப்படவேண்டும், கடந்த காலங்களில் கொல்லப்பட்ட தமது உறுப்பினர்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்து மாவோ கிளர்ச்சிவாதிகள் நேபாள தலைநகர் காத்மண்டுவுக்கு செல்லும் இரண்டு பிரதான வீதிகளின் போக்குவரத்தைத் தடை செய்திருந்தனர். இதனால், தலைநகர் காத்மண்டுவில் அத்தியாவசியப் பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷில் —

# அழிவடையும் நிலையில் 500 இந்துக் கோவில்கள்

(டாக்கா)

பங்காளதேஷில் அழியும் நிலையில் 500 இந்துக் கோவில்கள் இருக்கின்றன. அவற்றில் 300 கோவில்களை பாபு அகமட் என்ற முஸ்லிம் படப்பிடிப்பாளர் படம் எடுத்து இருக்கிறார். அவற்றில் இருந்து 100 கோவில்களின்படங்களை வைத்து ஒரு புகைப்பட கண்காட்சியை நடத்தி வருகிறார்.

டாக்காவில் நடக்கும் இந்தக் கண்காட்சியில் -

16ஆம் நூற்றாண்டு முதல் 20ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் கட்டப்பட்ட கோவில்களின் படங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தக் கோவில்கள் முஸ்லிம் மன்னர் ஆட்சியில் கட்டப்பட்டவை என்று கூறிய அவர் -பல முஸ்லிம் மன்னர்கள் இந்துக் கோவில்களுக்கு நிதி உதவி அளித்தனர் என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் - இந்தக் கோவில்கள் நம் பாரம்பரியத்தின் ஒரு பகுதி ஆகும். எனவே அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஐ.நா. சபையின் கல்வி, சமூக, பண்பாட்டு அமைப்பின் (யுனெஸ்கோ) டாக்கா பிரதிநிதி உல்ப்காங் வோல்மன் கூறுகையில் -அகமட்டின் 50 புகைப் படங்களை கொண்ட ஒரு புத்தகத்தை யுனெஸ்கோ வெளியிடும் என்று கூறினார்.

# எண்ணை உற்பத்தியை அதிகரிக்க ரஷ்ய அரசாங்கம் தீர்மானம்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தமது நாடு எண்ணை உற்பத்தியையும், ஏற்றுமதியையும் அதிகரிக்குமென தமக்கு உறுதி வழங்கியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

தற்போது உலக அளவில் எண்ணை விலை அதிகரித்து வரும் நிலையில் ரஷ்யாவின் இந்த அறிவிப்பு எண்ணை விலை அதிகரிப்பை கட்டுப்படுத்துமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும், உலக அளவில் எண்ணை ஏற்றுமதியில் இரண்டாவது இடத்தை வகிக்கும் ரஷ்யா, உடனடியாக எண்ணை விநியோகத்தை அதிகரிக்கும் சந்தர்ப்பம் இல்லையென மசகு எண்ணை விநியோகத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் கவலை தெரிவித்தனர்.

ரஷ்யாவின் உயர்தர எண்ணை உற்பத்திக் கம்பனியான இசேஸ் தற்போது நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளதனால், ரஷ்யா உடனடியாக எண்ணை உற்பத்தியையோ அல்லது விநியோகத்தையோ அதிகரிக்கும் சாத்தியமில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கம்பனி 2004ஆம் ஆண்டுக்கான உற்பத்தி அளவை ஏற்கனவே குறைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் ஒரு பீப்பாய் எண்ணை 50 டொலருக்கு விற்கப்பட்டது. காஸின் விலைகளும் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மட்டக்களப்பு சிறைச்சாலையில் 10 கைதிகள் உண்ணாவிரதம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் 10 பேர், நேற்று சிறைச்சாலைக் கூரை மீதேறி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தம்மை விடுதலை செய்யக் கோரியே இவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சிறைச்சாலையின் ஆண்கள் பிரிவைச் சேர்ந்த 6 பேரும், பெண்கள் பிரிவைச் சேர்ந்த நான்கு பேரும் இந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த மாதம் ஜூலை மாதம் 8 ஆம் திகதியும் 14 ஆம் திகதியும் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

கூரை மீது ஏறி உண்ணாவிரதமிருக்கும் இந்தக் கைதிகளுடன் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி பேச்சு நடத்தியதை அடுத்து கைதிகள் தமது போராட்டத்தை இடைநிறுத்தினர். (01)

## மல்வத்த பீட...

மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரனை சந்தித்தபோதே, இது குறித்து அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார். இலங்கை இனப் பிரச்சினை தீர்வில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஜே.வி.பி.யினரும் நேரடியாக பேசவேண்டிய அவசியத்தை இந்தச் சந்திப்பின்போது, மல்வத்த மகநாயக்கர் ஏற்றுக்கொண்டார்.

அதற்கான வாய்ப்புக்களுக்காகதான் ஜே.வி.பி.யுடன் பேசவுள்ளதாக அவர் உறுதியளித்தார்.

அரசாங்கத்தின் பங்காளிக்கூட்டு என்ற வகையில் ஜே.வி.பி. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியது தற்போதைய சூழ்நிலையில் அவசியமாகவுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கவென பிரதிநிதிகள் வரும்போது, இந்த நாட்டின் பிரஜை என்ற வகையில் தன்னால் பார்வையாளராக இருக்க முடியாது என்றும் மல்வத்த மகாநாயக்க தேரர் திப்பட்டவே சிறி சுமங்கள தேரர் தெரிவித்தார்.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளை மல்வத்த மகாநாயக்க தேரரை சந்திப்பதற்கான ஆயத்தங்களை தாம் மேற்கொள்ளப் போவதாக மலைய மக்கள் முனனணியின் தலைவர் மகாநாயக்கரிடம் தெரிவித்தார்.

## சர்வதேச..

தம் கொடுக்கும் வகையில் கண்காணிப்புக் குழு சர்வதேச சமூகத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

தமது உறுப்பினர்களை கொல்வதில் படையினர் சம்பந்தப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் விடுத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தவறானவை எனவும் சிறில் ஹெரத் தெரிவித்தார். இந்தச் சந்திப்புபற்றி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவிக்கையில்-

நேற்றைய சந்திப்பில் பல முக்கியமான விடயங்கள் பற்றிப் பேசினோம். இரண்டு முக்கியமான விடயங்களில் ஒன்றான கிழக்கில் நடைபெற்றுவரும் கொலைகள்பற்றி விவாதித்தோம்.

இவை ஏற்றுக்கொள்ளக்கூடியன அல்ல. அமைதி வழிமுறைக்கு ஊககமளிக்காதவை. அமைதி வழிமுறை நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு அது உதவாது. இன்று கிளிநொச்சி சென்று விடுதலைப்புலிகளுடன் இது பற்றிப் பேசுவோம்.

இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்ட மற்றொரு விடயம் திருகோணமலைத் துறைமுகம் பற்றியது. இன்னும் பல விடயங்கள் பற்றி பேசினோம்.

திருகோணமலை துறைமுகப் பகுதியில் என்ன நடக்கிறது என்பது குறித்து இரு தரப்புடனும் விசாரித்து வருகின்றோம். உண்மை அறியும் விசாரணை எனவும் இதைக் குறிப்பிடலாம். இது பற்றிப் புலிகளின் தலைமையுடன் பேசுவோம். எங்களுடைய முடிவுகளை இரு தரப்புக்கும் தெரிவித்திருக்கின்றோம்.

இரண்டு தரப்புக்களையும் களத்தில் ஒன்றாக அமரவைத்து ஒரு பேச்சுவார்த்தை நடத்துவதுதான் எங்களின் முக்கியமான நோக்கம்.

படையினரும் விடுதலைப் புலிகளும் தொடர்ந்து சந்தித்து விவாதிக்க வேண்டும். ஏனென்றால் கிழக்கில் உள்ள நிலைமை அமைதி வழிமுறையை மேலே கொண்டு செல்ல ஏற்றதாக இல்லை எனவும் தெரிவித்தார்.

## கருணா குழுவை...

சுட்டுக்கொல்லப்பட்ட கருணா குழு முக்கியஸ்தரான சச்சுமாஸ்டருடன் கைதான இவர், நேற்று அக்கரைப்பற்று நீதிமன்றத்துக்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்டிருந்தார்.

நீதிமன்றில் இவர் மீதான விசாரணை இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது பார்வையாளர் வரிசையில் இருந்த ஒருவர் திடீரென எழுந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டார்.

9 மில்லிமீற்றர் பிஸ்டல் மூலம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் கருணாகுழுவைச் சேர்ந்தவரான ஜெயக்குமார் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

அத்துடன், சிறைச்சாலை காவலர் ஒருவரும் நீதிமன்றக் கட்டளைச் சேவகரும் காயமடைந்தனர். துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்ட நபர் நீதிமன்றத்திலிருந்து தப்பிச் சென்றுவிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமுற்ற சிறைக்காவலர் சிவகுமார் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றிரவு 8.15 மணியளவில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள இரண்டு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இரு பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (07)

## காணாமற்போன..

சம்பவ இடத்துக்குச் சென்று நேரடி விசாரணைகளை நடத்தியபோது, காணாமற்போன பெண்ணின் சகோதரி தெரிவித்த தகவலின் அடிப்படையில் 4 பேரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

இந்த விசாரணையின்படி மூன்று சந்தேக நபர்கள் குறிப்பிட் பெண்ணை கொலை செய்து கழிவறைக் குழிக்குள் போட்டதாக தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த எலும்புக்கூடு எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்த பின்னர் பெண்ணின் கழுத்தில் கயிற்றைக் கட்டி இழுத்துச் சென்று கழிவறைக்குள் போட்டதாகவும், அவர் அணிந்திருந்த நகைகளைவிற்று பணத்தை பங்கிட்டுக் கொண்டதாகவும் விசாரணை நடத்திய நீதிபதியிடம் சந்தேக நபர்கள் தெரிவித்தனர். சந்தேக நபர் மூன்றுபேரையும் வரும் 30 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (03)

## தமிழ்...

கள் செல்லவேண்டும்.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு உகந்த அம்சம். இலங்கை அரசாங்கம் இதன் அடிப்படையில் பேச்சு நடத்த முன்வராதமை துரதிஷ்டவசமானது.

இலங்கை ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும் விடுதலைப் புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற நிலைப்பாட்டை ஏற்று கருத்து வெளியிட்டுள்ள நிலையில் ஏனைய தமிழ் அமைப்புக்களுடன் பேசவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

ரணில் விக்கிரமசிங்க அரசின் ஆட்சிக் காலத்தின்போது, அரசாங்கத்தின் அனுமதியுடனேயே புலிகளுக்கு வானொலி உபகரணங்கள் வழங்கப்பட்டது. ஹிட்அன்றி அன்னை தெரேஸாவோ பயன்படுத்துவதற்குரிய உபகரணங்களை வழங்கும் சுதந்திரம் தமக்கு இருப்பதாகவும் இது குறித்த தவறான விமர்சனங்களை தான் நிராகரிப்பதாகவும் கூறினார். (01)

## இணையத்தள சேவைகள்

# மீளத்திருத்தும் பணிகள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன

(கொழும்பு)

இணையத்தள சேவையினை மீளவும் ஆரம்பிப்பதற்கான கேபிள் இணைப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை கேபிளை பரீட்சிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. கொச்சியில் இருந்து விசேடமாக வரவழைக்கப்பட்ட கப்பல் நேற்று கொழும்பை வந்தடைந்தது.

இதேவேளை - செய்மதி மூலமாக இணைய சேவையினை வழங்க சிறிலங்கா ரெலிக்கொம் நடவடிக்கை எடுத்து வருவதாக நிறுவனத்தின் சர்வதேச தொடர்பு முகாமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை - இந்தத் திருத்த வேலைகள் நான்கு தினங்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதனைக் குறித்த தினத்தில் வழங்குவதற்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

திருத்த வேலைக்கு மின்சாரத்தை பயன்படுத்தும் போது - அவை இந்தியா, சிங்கப்பூர் மற்றும் வியட்நாம் நாடுகளின் இணையத்தளச் சேவைகளையும் பாதிக்கும் எனவும், இதனைக் குறித்த நாடுகளின் தலைவர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்து மேற்படி நாடுகளின் தலைவர்களின் அனுமதி பெற்றபின்னரே திருத்த வேலைகள் ஆரம்பிக்க வேண்டியிருப்பதாகவும், இதனால் - திருத்த வேலைகள் மேலும் தாமதமடையலாம் எனவும் சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - சிறிலங்கா ரெலிகொம்மின் இணையத்தளச் சேவைகள் பாதிக்கப்பட்டதற்கு மறைமுகமான கரமொன்று பின்னணியில் இருப்பதாக தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார். (03)

இது தொடர்பான சுதந்திரமான விசாரணையை நடத்தி இந்த இணையத்தள சேவை பாதிக்கப்பட்டதற்கு யார் பொறுப்பானவர்கள் என்பதனை கண்டுபிடிக்குமாறு இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸாருக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இணையத்தள சேவை பாதிக்கப்பட்டதனால் ஐந்து மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து எட்டு மில்லியன் அமெரிக்க டொலர் வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக ரெலிகொம்மின் சர்வதேச சேவைகள் பொது முகாமையாளர் எம்.பி. ஹேரத் தெரிவித்தார். (01)

## நோர்வே அதிகாரிகள் இன்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

நோர்வேக்கான இலங்கைத் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இருவர் இன்று காலை யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாக ஆராயும் பொருட்டே இவர்கள் இங்கு வரவுள்ளனர். கோவில் வீதியிலுள்ள யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இன்று காலை 11 மணியளவில் விசேட கலந்துரையாடல் ஒன்றையும் இவர்கள் நடத்தவுள்ளனர். (ப)

## கிழக்கு....

படைத் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய தற்போதுள்ள பாதுகாப்புத் திட்டத்தில் பல மாற்றங்கள் செய்யப்படும். இந்தப் பகுதிகளில் தற்போதைய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாக விசேட அதிரடிப்படையின் பிரதம கட்டளை அதிகாரியான, பிரதிப் பொலிஸ் மா அதிபர் லியனகே தெரிவித்தனர்.

## ஒலிம்பிக் பதக்க விபரம்

ATHENS 2004

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 23 | 26 | 17 | 66 |
| சீனா | 23 | 15 | 12 | 50 |
| ஜப்பான் | 15 | 8 | 9 | 32 |
| அவுஸ்ரேலியா | 14 | 9 | 14 | 37 |
| பிரான்ஸ் | 09 | 7 | 9 | 25 |
| ஜேர்மனி | 08 | 10 | 13 | 31 |
| இத்தாலி | 08 | 6 | 07 | 21 |
| உக்ரெயின் | 08 | 2 | 5 | 15 |
| ருமேனியா | 08 | 4 | 4 | 16 |
| பிரிட்டன் | 07 | 8 | 7 | 22 |
| ரஷ்யா | 07 | 17 | 19 | 43 |
| கொரியா | 06 | 10 | 5 | 21 |
| கிறீஸ் | 05 | 2 | 2 | 9 |
| ஹங்கேரி | 04 | 4 | 2 | 10 |
| நெதர்லாந்து | 3 | 7 | 8 | 18 |
| சுவீடன் | 3 | 0 | 1 | 4 |
| துருக்கி | 3 | 0 | 1 | 4 |
| பெலாரஸ் | 2 | 3 | 6 | 11 |
| கனடா | 2 | 3 | 1 | 6 |
| போலந்து | 2 | 2 | 3 | 7 |
| ஸ்லோவாக்கியா | 2 | 2 | 1 | 5 |
| பல்கேரியா | 2 | 1 | 5 | 8 |
| எதியோப்பியா | 2 | 1 | 1 | 4 |
| ஜோர்ஜியா | 2 | 1 | 0 | 3 |
| தாய்லாந்து | 2 | 0 | 2 | 4 |
| சிலி | 02 | 00 | 1 | 3 |
| நோர்வே | 2 | 0 | 0 | 2 |
| நியூஸிலாந்து | 2 | 0 | 0 | 2 |




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.